பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 27 புதன்கிழமை (11-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:260

### அமைதி முயற்சியில் அரசு-புலிகள் சமபங்காளிகள்

# இருதரப்பு யோசனைகளின் அடிப்படையில் பேச்சு நடத்துவதே சர்வதேச நடைமுறை

## உதயனுக்கு அளித்த செவ்வியில் ஜயந்த தனபால தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 11

**"அமைதிப் பேச்சுக்களில் அரசும், புலிகளும் சமபங்காளிகள் என்ற அந்தஸ்தை ஏற்றுக்கொண்டுள்ளோம்; பரஸ்பரம் மதிப்பளிக்கின்றோம். எனவே, ஒருதரப்பு முன்வைக்கும் யோசனைகளின் அடிப்படையில் மட்டுமே பேச்சை ஆரம்பிக்கமுடியும் என்று பிடிவாதம் பிடிக்கக்கூடாது.**

**"புலிகள் முன்வைக்கும் ஆலோசனையைப் பேச்சுக்கு அடிப்படையாக அரசு ஏற்கும் அதேசமயம், அரசு முன்வைக்கும் ஆலோசனையையும் பரிசீலிக்க புலிகள் இணங்கவேண்டும்.**

**"சர்வதேச மட்டத்தில் சமரசப் பேச்சுக்கள் இப்படித்தான் நடந்தன.**

**"எனவே, அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினருமே முன்வைக்கும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்துவோம்."**

**- இவ்வாறு இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜயந்த தனபால உதயனுக்கு அளித்த சிறப்புச் செவ்வியில் தெரிவித்தார்.**

இரண்டு நாள் விஜயமாக வடக்கே வந்த அவர், நேற்று நண்பகல் யாழ்ப்பாணம், தனங்களப்புப் பகுதியில் வைத்து உதயனுக்குச் சிறப்புச் செவ்வி அளித்தார். அந்தச் செவ்வியிலேயே அரசின் மாற்று யோசனைகளையும் பேச்சில் பரிசீலனைக்கு எடுக்கப் புலிகள் முன்வரவேண்டும் என அவர் கோரினார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

கே : தங்களது யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் என்ன?

ப: சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியை ஏற்றபின் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன்.

புரிந்துணர்வு உடன்பாட்டைக் கண்காணித்

(2ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் இறுதி வினாத்தாள் இன்றைய உதயனுடன் வெளிவருகின்றது.

வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெறலாம்.

### புலிகள் - படையினர் அம்பாறையில் இன்று சந்திப்பு

நிந்தவூர்,ஓக.11

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலைமையில் இன்று கலந்துரையாடல் இடம்பெறவிருக்கின்றது.

அம்பாறையில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹரமோ தலைமையில் இன்று முற்பகல் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்

(16ஆம் பக்கம் பார்க்க)

### களுவாஞ்சிக்குடியில் ஒருவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஓக.11

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நேற்றிரவு கல்லடி மத்தியமுகாமைச் சேர்ந்த சீனித்தம்பி யோகராஜா (வயது39)என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக் கிளைக்குச் சமீபமாக உள்ள உணவகம் முன்பாக நேற்றிரவு 7.30மணியளவில் இவர் நின்றிருந்தார் என்றும் -

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவர் இவர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

### அந்திராக்ஸ் அச்சுறுத்தல்; அமெ. தூதரகம் மூடப்பட்டது

'அந்திராக்ஸ்' நச்சுப்பவுடர் சிறிய கடிதத்தில் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வரையறையின்றி இழுத்து மூடப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக தூதரகப் பணியாளர்கள் அனைவரும் தூதரகக் கட்டடத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, காலி வீதியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அருகிலுள்ள அமெரிக்கத் தகவல் மையம், யு.எஸ்.எயிட் அலுவலகம் என்பனவும் மூடப்பட்டன.-

அமெரிக்கத் தூதரகத்துக்கு விஷேட கடிதம் ஒன்று அனுப்பப்படுவது பற்றிய தகவல் நேற்றுக்காலை அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து, நண்பகல் அளவில் தூதரகக் கடிதங்களைப் பிரித்துக்கொண்டிருந்த பணியாளர்கள் 'ஒரு கடிதத்தில் வித்தியாசமான பவுடர் வந்திருப்பதை அவதானித்துள்ளனர். அதையடுத்தே தூதரகம் எச்சரிக்கை அடைந்ததாகக் கூறப்படுகின்றது.

உடனடியாக தூதரகத்தின் முதல் இரண்டு மாடிகளும் இழுத்து மூடப்பட்டன. குறிப்பிட்ட பணியாளர்கள் மட்டும் மூன்றாம், நான்காம் மாடியிலிருந்து பணியைத் தொடர்ந்தனர்.

ஆனால், அமெரிக்காவிலிருந்து சற்றுக் கழித்துக கிடைத்த உத்தரவையடுத்து பிற்பகல் 2 மணியளவில் தூதரகம் காலவரையறை குறிப்பிடப்படாமல் இழுத்து மூடப்பட்டது.

"பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடைமுறைகளுக்காக தூதரகம் மூடப்பட்டுள்ளது என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூறமுடியும்"-

என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ்ட் லோஸ் தெரிவித்தார்.

"நிலைமையை ஆய்வு செய்கிறோம். எப்போது தூதரகம் மீண்டும் திறக்கப்படும் என்பதை இப்போது கூறமுடியாது" - என்றும் அவர் சொன்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெ. அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.11

உலகளாவிய ரீதியில் கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின்கீழ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பணிப்பாளர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று நேற்று குடாநாட்டிற்கு விஜயம் செய்து மிதிவெடி அகற்றப்படும் பிரதேசங்களைப் பார்வையிட்டது.

உலகளாவிய ரீதியில் கண்ணிவெடிகளை அகற்றும் திட்டத்தின் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பணிப்பாளர் றிச்சாட் கிட், பிரதிப் பணிப்பாளர் கேணல் ஸ்ருவாட் சி.ஹரிஸ் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவுடன் அமெரிக்கம் தூதரக உயர்நிலை அதிகாரி கொடி ரெய்லரும உடன் வந்தார்,

நேற்றுக்காலை வருகை தந்த இக்குழுவினர் குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோரஸ்ற், டெனிஸ் மற்றும் இராணுவ பொறியியல் பிரிவு ஆகியவற்றின் அனுசரணையுடன் மிதிவெடி அகற்றும் பிரதேசங்களான அரியாலை, புத்தூர், தனங்களப்பு ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டனர்.

அதன்பின் யாழ். செயலகத்திற்குச் சென்ற இக்குழுவினர் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியைச் சந்தித்து மிதிவெடி அகற்றுவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். (ஒ-5)

### ஜே.வி.பியினரைச் சந்திப்பதை கடைசி நேரத்தில் ஜனாதிபதி ரத்து

கொழும்பு,ஓக.11

ஜே.வி.பியினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது. இதனால் ஜே.வி.பியினர் பெரிதும் கொதிப்படைந்துள்ளனர்.

அரசியல் விவகாரங்கள் மற்றும் இரு கட்சிகளுக்கும் இடையிலான சில பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவதற்கு ஜே.வி.பியினர் ஜனாதிபதியிடம் நேரம் கேட்டிருந்தனர்.

விரும்பியோ, விரும்பாமலோ ஜனாதிபதியும் நேற்றுச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கியிருந்தாராம்.

ஆனால், ஜே.வி.பியினர் பேச்சுக்குத் தயாராகிக் கொண்டு இருக்கும்போது- கடைசி நேரத்தில்- ஜனாதிபதி தனக்கு நேரமில்லை என்று சந்திப்பை ரத்துச் செய்துவிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஜே.வி.பியினர் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இச்செயல் ஜே.வி.பியினரை உதாசீனப்படுத்தி அகௌரவப்படுத்தும் போக்கு என ஜே.வி.பியினர் கருதுகின்றனர்.

இது ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரித்துள்ளது என்பதையே காட்டுகிறது என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (ஒ-க)


## ஆகக்கூடிய வட்டி!

இப்போது தேசிய சேமிப்பு வங்கி உங்களுடைய புதிய நிலையான வைப்புகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகின்றது. அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைக்கு விரைந்து செல்லுங்கள்.

| தவணை வைப்புக்கள் | | வட்டி வீதம் (வருடத்துக்கு) | வ.வி.வ |
|---|---|---|---|
| நிலையான வைப்பு | 03 மாதங்கள் | 7.7% | 7.92% |
| | 06 மாதங்கள் | 7.8% | 7.95% |
| | 12 மாதங்கள் | 8.0% | 8.0% |
| | 24 மாதங்கள் | 8.4% | 8.07% |
| | 12 மாதங்கள் (மாதாந்தம்) | 7.75% | 8.03% |
| | *12 மாதங்கள் (மாதாந்தம்) ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு | 8.25% | 8.57% |
| *கௌரவ | | 9.75% | 10.20% |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் (3-48 மாதங்கள்) | | 7.75%-9.0% | 8.0% |

NSB

# உதவாத உணவு, பானங்கள் விற்பனை குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.11

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு மேற்படி மாவட்டங்களுக்கு சுட்டுத்துண்டு இடப்படாது மென்பானங்கள் விற்பனை செய்வது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, போலி சுட்டுத்துண்டு உடைய மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இது விடயத்தில் விழிப்புடன் செயற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்பட்டு விற்கப்பட்ட மென்பானம் அடங்கிய போத்தலினுள் ஒருபொருள் மிதந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் -

இது தொடர்பாக தமிழீழ சுகாதாரசேவையினர் விசாரணை மேற்கொள்கின்றனர் என்றும் - கூறப்படுகிறது.

## தபாற் பொதிகள் எடுத்துவரப்படுகின்றன

வவுனியாவில் கடந்த பலமாதங்களாகத் தேங்கிக்கிடந்த குடாநாட்டுக்கான 2ஆயிரத்து 52 வெளிநாட்டுத் தபால்களும் இன்று கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகின்றன. கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட 40ஆயிரம் கிலோ நிறையுடைய இத்தபால் பொதிகள் சோதனையின் பின்னர் இன்று திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்படவுள்ளன. (ஒ-9)

# பெரும் வரட்சி இங்கு ஏற்படும் எச்சரிக்கிறது ஐ.நா. நிறுவனம்

ரோம்,ஒக.11

வரட்சியின் பிடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு அடுத்த இரண்டு மாதங்கள் முக்கியமானவை. மழையின்மையால் பெரும்போகம் பாதிப்புறும் அபாயமுள்ளது.

ஐ.நா., உணவு, விவசாய நிறுவனம் இவ்வாறு எச்சரித்துள்ளது.

ரோமைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனம் இலங்கையில் வரட்சிநிலை மோசமாகி வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

பெரும்பாலான பிரதேசங்களில் ஜுலை நடுப்பகுதி வரையான மழைவீழ்ச்சி வழமையை விட முப்பது முதல் ஐம்பது வீதம் குறைந்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும் விவசாயச் செய்கை பெரும்போகத்தின் போதே மேற்கொள்ளப்படுகின்றது. அறுபதுவீத உற்பத்தி இக்காலத்திலேயே இடம்பெறுகின்றது.

மழைவீழ்ச்சியில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லாவிட்டால் ஒக்ரோபர் மாதம் முதல் அடுத்த 2005மார்ச் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும்போகம் பெரிதும் பாதிக்கப்படும் என எச்சரிக்கப்படுகின்றது.

பல மாவட்டங்களில் சாகுபடி மூன்றாவது முறையும் பிழைத்துப்போகும் ஆபத்து நிலைமையும் உள்ளது.

கடந்த பெரும்போகம் முதலே இலங்கையில் மழைவீழ்ச்சி கணிசமாகக் குறைந்துள்ளது.

வடமேற்கு மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும் பல சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் பெப்ரவரி கடைசியிலேயே தமது கொள்ளளவில் 21 முதல் 34 வீதத்திற்கே நீரைக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கொழும்பு ரயிலில் தமிழ் இளைஞரிடம் கொள்ளை

வவுனியா,ஒக.11

வவுனியாவில் இருந்து கொழும்பு சென்ற புகையிரதத்தில் பயணித்த இரு தமிழ் இளைஞர்களிடம் பொலீஸார் என்று தம்மைக் கூறியவர்கள் வவுனியாவில் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். திங்கடகிழமை வவுனியாவில் இருந்த புறப்பட்ட இரவுப் புகையிரதத்தில் இந்தியாவில் மேற்படி மேற்கொள்வதற்காக விசா பெற இரண்டு இளைஞர்கள் கொழும்பு சென்றனர். அவர்கள் இருந்த பெட்டியில் ஏறிய சிலர் தாங்கள் பொலீஸார் என்று கூறிவிட்டு அந்தப் பெட்டியினுள் இருந்த அனைவரையும் சோதனை செய்துள்ளனர். அப்போது மேற்படி இரண்டு இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் ,பெற்றுக் கொண்டனர். இதன் பின்னர் அம்பேபுஸ புகையிரத நிலையத்தில் அவர்கள் இறங்கியதுடன் அந்த இளைஞர்களையும் இறக்கினர். அங்கு வைத்து அந்த இளைஞர்களிடம் இருந்து கையடக்கத் தொலைபேசிகள், நகைகள், பணம் போன்றவற்றை அபகரித்துக் கொண்டு தப்பிச்சென்றனர்.

வவுனியா-கொழும்பு இடையேயான புகையிரத சேவைகளில் பயணிப்போரிடம் குறிப்பாக தமிழர்களிடம் கொள்ளையடிப்பது அடிக்கடி இடம்பெற்றுவருகிறது. புகையிரதப் பாதுகாப்புப் படையினர்உரிய நடவடிக்கை மேற்கொண்டு இதனைத் தடுக்க வேண்டும் என்று புகையிரதப் பயணிகள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-164)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஒக.11

இருபாலை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது. (10)

# இருதரப்பு யோசனைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுக்களின் பிராந்திய அலுவலகங்களுக்கு விஜயம் செய்துவருகின்றேன்.

அந்த உடன்பாடு எவ்வாறு செயற்படுகிறது என்பதை அறிவதோடு, இந்தச் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்த சமாதானச் செயலகம் மூலம் என்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றேன்.

இந்த உடன்பாடுதான் தற்போது இங்கு அமைதிச் சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை தொடரவேண்டும் என்பதே எனது விருப்பம்.

கடந்த ஜுன் மாதக் கடைசிவரை விடுதலைப் புலிகளுக்கு எதிராக 2 ஆயிரத்து 412 மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பதியப்பட்டுள்ளன. படையினருக்கு எதிராக 112 மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளே பதியப்பட்டுள்ளன. இதை மேலும் கணிசமான அளவு குறைக்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக மீறல்கள் நடந்துள்ளன. இவை கடந்த மார்ச்சுக்கு முந்தியும் பிந்தியும் இடம்பெற்றவை.

அதிக யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் நடந்த இரண்டாவது இடம் யாழ்ப்பாணம்.

விடுதலைப் புலிகளின் மீறல்களிலும் படையினரின் மீறல்களிலும் எண்ணிக்கையில் வித்தியாசம் இருக்கின்றது. எண்ணிக்கையல்ல இதில் முக்கியம். எவர் மீதும் விரல் சுட்டிக் காட்ட நான் விரும்பவில்லை. எல்லோரும் ஒத்துழைத்து மீறல்களைக் குறைக்கவேண்டும். அதுவே முக்கியமான விடயம்.

அப்போதுதான் நாம் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்பமுடியும். இதுவே எனது வருகையின் பிரதான நோக்கம்.

இந்தச் சந்தர்ப்பத்தை, பாதுகாப்புப் படை அதிகாரிகள், அரச அதிபர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் சமூக அமைப்புப் பிரதிநிதிகள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்குப் பயன்படுத்திக் கொண்டேன்.

அத்துடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோயில், நயினாதீவில் உள்ள பௌத்த, இந்து ஆலயங்கள் ஆகியவற்றுக்கும் சென்று தரிசித்தேன். கண்ணிவெடி அகற்றும் சில இடங்களையும் பார்வையிட்டேன்.

நிரந்தரத் தீர்வுக்கு உழைக்கும்போது இவை எல்லாம் அவசியம். இங்குள்ள நிலைமைகளை ஆழமாக அறிந்துகொள்ள இந்த விஜயம் உதவியாக இருந்தது.

இன முரண்பாடுகளின் தழும்புகளில் இருந்து மீள்வதற்கு யாழ்ப்பாணம் முயன்றுகொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. உளவியல் ரீதியிலான தழும்புகள் இன்னமும் மாறவில்லை என்பது எனக்குத் தெரியும். அந்தத் தழும்புகளும் அழிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இதைப்போல தெற்கில் உள்ள தழும்புகளும் காலப்போக்கில் அழியும் என நம்புகிறேன். இவை நிரந்தரத் தீர்வுக்கு அவசியமாகின்றன. நிரந்தரத் தீர்வு ஏற்படும்போது இவை எல்லாம் மறைந்துவிடும்.

கே: சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை என்ன?

ப: இன்றைய நிலைமை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முழுமையாகத் தெரியும். ஏனெனில் நம்பிக்கைக்குரிய நோர்வே அனுசரணையாளர் மூலம் பரஸ்பரம் கருத்துக்களை அறிந்துகொள்கிறோம். ஊடகங்களில் வெளிவரும் கருத்துகள் அடிப்படை விடயங்களைக் குழப்புவனவாக இருந்து விடக்கூடாது.

நேர அட்டவணை தொடர்பாக ஒரு பிரச்சினை இப்போது இருக்கின்றது. இடைக்கால நிர்வாக அதிகார சபை ஒன்றைப் பற்றி ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். வடக்கு - கிழக்கை புனரமைக்கவும் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவும் இந்தச் சபையின் அவசியத்தை உணர்ந்து இதைத் தெரிவித்துள்ளோம்.

இடைக்கால நிர்வாகம் குறித்து ஆராயும்போது விடுதலைப் புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிய ஆலோசனைகளைக் கொண்டுவர அவர்களுக்கு உரிமை உண்டு, அரசு ஒருபோதும் இந்த ஆலோசனையைக் குப்பைக்கூடைக்குள் எறியவேண்டும் என்று சொன்னதாகக் கருதக்கூடாது.

அரசின் முக்கிய அணிக் கட்சியான சுதந்திரக் கட்சி இந்த ஆலோசனைகளை எதிர்க்கின்றபோதும், புலிகளின் யோசனைகளுக்கு அரசு உரிய மரியாதையை வழங்கி அதைக் கவனிக்கும்.

அதேசமயம், இந்த யோசனைகளில் பல அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாக உள்ளன. ஆனாலும் அரசு சிலவற்றை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அதேசமயம், அரசின் மாற்று யோசனைகளையும் ஆலோசனைக்கு எடுத்து விவாதிக்கப் புலிகள் தயாராக இருக்கவேண்டும்.

பேச்சுக்களில் சம பங்காளிகள் என்ற முறையில் இதைத்தான் நாங்கள் எதிர்பார்க்க வேண்டும்; எதிர்பார்க்கிறோம்; பரஸ்பரம் மதிப்பளிக்கவேண்டும். பல்வேறு யோசனைகளுக்கு இடையில் ஓர் இணக்கப்பாட்டை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இதுவே அரசின் நிலைப்பாடாகும்.

இருந்தபோதிலும் தங்களது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை மட்டுமே பேச்சில் எடுக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகின்றது. இது நியாயமற்ற நிலைப்பாடாகும்.

பேச்சு ஒன்று நடப்பதாக இருந்தால் அது சமநிலையில் நடக்கவேண்டும். சர்வதேச மட்டப் பேச்சுக்களில் இப்படித்தான் நடைமுறை பின்பற்றப்பட்டது. முரண்பாடுகள் தொடர்பான பேச்சுக்களும் இப்படித்தான் நடக்கின்றன. இது எனது அனுபவ ரீதியான கருத்து.

அதாவது, ஒருதரப்பின் காலஅட்டவணையை மட்டுமல்ல இணக்கப்பாட்டுடன் அட்டவணை அமையவேண்டும். இதுதான் தற்போதைய நிலைமை.

நோர்வே மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பிய ஆலோசனைகள் தொடர்பாகப் பதில் அளிப்பதற்கு புலிகள் ஏன் நீண்டகாலம் எடுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. எந்த நிமிடத்திலும் பேச்சு மேசைக்கு வர நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின் நீண்ட இடைவெளி ஒன்று இருந்துள்ளது. இருதரப்பும் நேருக்கு நேர் பேசியிருக்கவேண்டும். அது தவறியதால் நிறைய தப்பபிப்பிராயங்களும், அவநம்பிக்கைகளும் உருவாகியுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் ஊடகங்கள் தவறான வழிகாட்டுக் கருத்துக்களை வெளியிட்டமையால், சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அப்படி நேர்ந்திருக்கக்கூடாது .

இருதரப்பினரும் நேருக்கு நேர் பேசக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

கே: ஜனாதிபதி நோர்வேக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளாரா?

ப: ஜனாதிபதி மீண்டும் நோர்வேயை அழைத்துள்ளாரா என்பது எனக்குத் தெரியாது. திரும்பவும் அவர்களை அழைக்கவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை. ஏனெனில் திறந்த அழைப்பு அவர்களுக்கு ஏற்கனவே இருந்து வருகின்றது.

ஓகஸ்ட் மாதம் ஐரோப்பாவில விடுமுறை காலம். இதை இங்கு அனைவரும் உணர்கிறார்கள் இல்லை. முக்கிய நடிகர் விடுமுறையில் இருக்கலாம் ஆனால் ஹெல்கிஸன் இப்போது தான் வந்து திரும்பியுள்ளார்.

குறிப்பிட்ட இடைவேளைக்குப் பின்னர் அவர்கள் மீண்டும் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். அவர்களின் விஜயங்கள் வெவ்வேறு மட்டங்களில் இடம்பெற்றுவருகின்றன. சில சமயம் ஹெல்கிஸன் வருவார். சில சமயம் சொல்ஹெய்ம் வருவார். எல்லாக் காலங்களிலும் அவர்களின் தூதர் இங்கு இருந்து வருகிறார். அவரும் இப்போது விடுமுறையில் இருக்கிறார்.

நோர்வேத் தூதர் ஊடாக நோர்வேக்கு கடந்த சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார் என வந்த செய்திகளில் அடிப்படை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நோர்வேக்கு புதிய அழைப்பு விடுக்கத் தேவையில்லை. ஏனெனில் ஏற்கனவே அனுசரணையாளர்களாக அவர்கள் இங்கேயே இருக்கிறார்கள். இது தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஒரு செயற்பாடு.

கே. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று தமிழ்ச்செல்வன் கூறுகிறார். அதில் அவர் உறுதியாகவும் உள்ளார். அப்படியாயின் பேச்சை ஆரம்பிக்க அரசு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்போகிறது?

ப: நோர்வே அனுசரணையாளர்கள் இந்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டை உருவாக்குவார்கள் என நம்புகிறோம். அனுசரணையாளர்கள் என்ற முறையில் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இந்த விடயத்தில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது அவர்களது பணி. எனவே, பந்து இப்போது புலிகளின் களத்தில். அவர்களது பிரதிபலிப்புக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும்.

கே: அதி பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கு விஜயம் செய்தீர்களா?

ப: பலாலி மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயங்களுக்குப் படை அதிகாரிகளுடன் சென்றேன்.

கே: அந்தப் பகுதிகளில் மீள் குடியமர்வுக்கு ஏற்பாடு செய்வீர்களா?

ப: அது என்னுடைய பொறுப்பு அல்ல. உயர் பாதுகாப்பு வலயத்தில் சுமார் 400 ஏக்கர் நிலத்தை இராணுவம் ஏற்கனவே விடுவித்துள்ளது. அவை விவசாய நிலங்கள், அவை விவசாயத்திற்கு உட்படுத்தப்படும் என நம்புகிறேன். அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரம், பேச்சுக்கள் ஆரம்பமாகும்போது முறையாக விவாதிக்கப்படலாம் என நினைக்கிறேன். ஏனென்றால் இந்த விவகாரம் உணர்ச்சிபூர்வமான விடயம். இவை இரண்டு தரப்பினரதும் பாதுகாப்புடனும் கூட தொடர்புபட்டவை. இருதரப்பினரின் பாதுகாப்புத் தேவைகளை நாம் மதிக்க வேண்டும்.

ஏனெனில், அமைதியை நிலைநாட்டுவது பற்றித்தான் பேசவிருக்கின்றோம். நாம் எல்லோரும் அமைதியை விரும்புகிறோம். அது நிலையான அமைதியாக இருக்கவேண்டும்.

கே: எப்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என நம்புகிறீர்கள்?

ப: நான் ஆருடம் சொல்பவன் அல்லன். ஆனால், காலங்கடக்காமல் மிக விரைவில் பேச்சு ஆரம்பமாகுமென எதிர்பார்க்கிறேன்.

இந்தப் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தபோது, பேச்சுக்கள் விரைவில ஆரம்பமாகுமென நினைத்தேன். நீண்டகாலம் செல்வதைப்பார்த்து ஏமாற்றமடைந்தேன். பேச்சு விரைவில் ஆரம்பமாகுமென நம்புகிறேன். அதற்கு நானும் எனது அலுவலர்களும் உதவ ஆயத்தமாக இருக்கிறோம்.

கே: சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்க வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள். இந்த முயற்சிகள் முறிவடைந்து மீண்டும் பழைய நிலை ஏற்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. அது பற்றி...?

ப: யுத்த நிறுத்த உடன்பாடு முழுமையாக முறிந்துவிடும் என்றோ, பழைய நிலைக்கு திரும்பவேண்டிய நிலை ஏற்படும் என்றோ நான் நினைக்கவில்லை. ஆனால் தற்கொலைக் குண்டுதாரிகள் திரும்பவும் தோன்றியிருப்பதும் கொழும்பில் கடந்த 7ஆம் திகதி நடந்த கொலை, கிழக்குக் கொலைகள் என்பனவும் ஏமாற்றம் தருவனவாக உள்ளன.

கருத்து வேறுபாடுகள் தோன்றுமானால் அவைகள் கொலைகள் மூலமோ, ஆயுதங்கள் மூலமோ அன்றி ஜனநாயக ரீதியிலும் மனித உரிமைகள் கோட்பாடுகள் ரீதியிலும் பேசித் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும். அதுதான் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் நாகரிகமான முறையாகும்.

ஊடகங்களில் வெளிவரும் கருத்துக்கள் நடு நிலைமையாக அமைய வேணடும். வடக்கு - கிழக்கு, தெற்குப் பகுதிகளில் உள்ள சமூக அமைப்புக்கள் மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்த முயற்சி எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. அமைதி உலகம் ஒன்றை உருவாக்க இது உதவும்.

நோர்வே அனுசரணையாளர் ஊடாக அரசும்-புலிகளும் கருத்துப் பரிமாறிக் கொள்வதுதான் ஆரோக்கியமானது. எங்களுக்கிடையில் என்ன நடக்கின்றது என்பது இருதரப்புக்கும் தெரியும், எனவே, வெளியில் இருந்துவரும் சத்தங்களையும், குரல்களையும் நாங்கள் செவிமடுக்கத் தேவையில்லை.

கே: எப்போது கிளிநொச்சிக்குப் போவீர்கள்?

ப: எவர்மீதும் என்னை நான் கொண்டு போய் திணிக்க முடியாது. உண்மையில் அழைப்பு ஒன்று வருமாயின் அதை ஆலோசனைக்கு எடுப்பேன்.

கே: விடுதலைப் புலிகளைச் சந்திக்கப் போவீர்களா?

ப:- அவர்கள் அழைத்தால் போவேன்.

கே:- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொள்வீர்களா?

ப: வவுனியாவுக்குப் போக விருக்கின்றேன். மன்னார் , திருகோணமலை ஆகிய இடங்களுக்குப் போவேன். ஆறு மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவிருக்கின்றேன். இந்த அலுவலகங்களுக்குச் செல்வதே என் நோக்கம்.

விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கண்காணிப்புக் குழு அலுவலகங்களுக்கே செல்வேன். கிளிநொச்சியில் கிளை அலுவலகம் ஒன்று தான் செயற்படுகின்றது.

கே: வடக்கு மக்களுக்கு என்ன செய்தியை விடுக்க விரும்புகிறீர்கள்?

ப: வடக்கு மக்களாகிய நீங்கள் ஒரு பழம் பெரும் கலாசாரத்தை உடையவர்கள். இந்தக் கலாசாரம் இலங்கையின் வரலாற்றுக்கு பெரும் பங்கு அளித்துள்ளது. சமீபகாலத்தில் நடந்த சம்பவங்கள் பழைய பாரம்பரியங்களான சகவாழ்வு, ஐக்கியம் என்ற நிலையில் இருந்து அப்பால் எம்மைக் கொண்டு சென்றுவிட்டன. அந்த நிலைமையைப் பின்தள்ளவேண்டும்.

1983ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரம் தொடர்பாக ஜனாதிபதி மன்னிப்புக் கோரியுள்ளார். அது நல்ல ஆரம்பம் என்று நினைக்கிறேன். புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்க இது உதவும். இது எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள சகல மக்களுக்கும் கௌரவத்துடனான அமைதி நிலையைக் கொண்டுவரும். இந்த அமைதியைக் கொண்டு வருவதில் ஏனைய மக்களுடன் வடக்கு மக்களையும் இணைநது கொள்ளுமாறு அழைக்கிறேன். - என்றார்.

(அ-3)

# உதயன்

## புதியயோசனை என்று புதுக்கதை எதற்காக?

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசுத்தரப்பின் மெத்தன - உதாசீன - போக்கு சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகி வருகின்றது.

சிங்களப் பேரினவாதிகளின் தயவில் தனது அரசின் ஆட்சியைக் கொண்டிழுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதன் காரணமாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இயலாத இக்கட்டில் சிக்கியுள்ளார்.

தாம் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து மட்டுமே முதலில் பேசவேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கமும், அது பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் தரப்பும் ஒரே பிடியாக அடம்பிடிக்கின்றன.

அந்த வற்புறுத்தலைத் தவறு என்றோ, நியாயமற்றது என்றோ குறைகூறப் பின்னடிக்கும் சர்வதேச சமூகம், எப்படியாவது பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றது.

ஆனால், ஜனாதிபதியின் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கு, மூச்சுக்குக் கூட இடம் இல்லை என்று அடித்துக் கூறிவிட்டது.

தனது அரசின் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிப்பதற்காக மற்றொரு பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதற்கு வளம் பண்ணிக்கொண்டு காத்திருக்கிறது ஜனாதிபதியின் ஆளும் தரப்பு. ஜாதிகஹெல உறுமயவும் இடைக்கால நிர்வாகம் என்ற கதையை எடுத்தால் சீறுகின்றது. அந்த விடயம் குறித்துத் தமிழர் தரப்போடு சந்திரிகாவின் அரசு பேசமுயன்றால், அந்த அரசை உண்டு, இல்லை என்று பண்ணி, கவிழ்த்து விட்டுத் தான் ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மறுகாரியம் பண்ணும் என்பது நிச்சயமாகி வருகிறது.

'கூடாத கூட்டந்தனைச் சேர வேண்டாம்' என்ற ஆன்றோர் வாக்கைப் புறக்கணித்து - ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையில் - தீயோருடன் இணங்கியதால் இன்று இரு தலைக்கொள்ளி எறும்பாக இழுபடுகிறார் ஜனாதிபதி.

இன்றைய நிலையில், தமிழர் தரப்பின் நீதியான கோரிக்கை, நாட்டுமக்களின் நிறைவான நம்பிக்கை, சர்வதேச சமூகத்தின் நியாயமான எதிர்பார்ப்பு, சிங்களப் பேரினவாதிகளின் கடும் எதிர்ப்பு - இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்களைப் புரிந்துகொண்டுள்ள சந்திரிகா அரசு, புதுக்கதை விடத் தயாராகிவிட்டது எனத் தெரிகின்றது.

அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வகை செய்யும் விதத்தில் புதிய யோசனைகளை அரசு தயாரித்து வருகின்றது என்ற விவகாரம்தான் புதுக்கதையாக அரசுத் தரப்பினால் மெல்ல அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. இந்த எத்தனத்தின் மூலம் ஒரே கல்லில் பல மாங்காய்களை விழுத்த முயல்கிறார் ஜனாதிபதி.

இந்தத் திட்டத்தின் மூலம் -

☆ அரசின் புதிய யோசனைகள் தயாரிப்பு, அதைப் புலிகள் பரிசீலனை.... என்றெல்லாம் காலத்தை இழுக்கலாம்.

☆ 'புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து நாம் பேசவில்லை. அரசு முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிலேயே பேசப் போகின்றோம்' என்று கூறி சிங்களப் பேரினவாதிகளைச் சமாளிக்கலாம்.

☆ 'அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் இந்த அரசுக்கு உண்மையான நாட்டம் உள்ளது. அதனால்தான் தானே புதிய யோசனைகளைத் தயாரித்து பேச்சுக்கு வகை செய்கின்றது' - எனக் காட்டி சர்வதேச சமூகத்துக்குப் பூச்சுற்றலாம்.

☆ புதிய யோசனைகளைப் புலிகளிடம் சமர்ப்பித்து அது குறித்துத் திட்டவட்டமான முடிவு எடுக்கவேண்டிய இக்கட்டில் அவர்களை மாட்டலாம். அவர்கள் அந்த யோனையை ஏற்றுப் பேச்சுக்கு வந்தால் நல்லது, பேசலாம். வராவிட்டால், அமைதிப் பேச்சுக்குப் புலிகள் விரோதிகள் என்றும், அதனால்தான் அரசின் யோசனைகளை நிராகரித்துப் பேச்சு வாய்ப்பை அவர்கள் குழப்பினார்கள் என்றும் சர்வதேச மட்டத்தில் பிரசாரப்படுத்தலாம்.

- இப்படியெல்லாம் பல நோக்கங்களுடன்தான் - பல முனைப்புடன்தான் - புது யோசனைத் தயாரிப்பு என்ற வலையை விரிக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

அந்த வலையில் சிக்குவதற்குப் புலிகளா, கொக்கா?

புதுயோசனை என்ற பேச்சுக்கு ஆரம்பத்திலேயே ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

*"ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையிலேயே எமது யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வரைவின் அடிப்படையில்தான அரசுடன் பேசுவோம். புலிகளின் இந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எமது யோசனைகளின் அடிப்படையில் அரசு பேச முன்வந்தால் இதயசுத்தியுடன் அப்பேச்சுக்களில் பங்குபற்றுவோம்"* - என்று தெளிவுபடக் கூறிவிட்டார் தமிழ்ச்செல்வன்.

ஆகவே, புதிய யோசனைகள் தயாரிப்பு என்ற பெயரில் தாம் பின்னும் வலையில், புலிகள் சிக்கமாட்டார்கள் என்பதை அரசு ஆரம்ப நிலையிலேயே புரிந்துகொள்வது நல்லது.

# அடையாள அட்டை விண்ணப்பம்; தொடர்பு முகவரியை உறுதிப்படுத்துக!

## கிராம அலுவலர்களுக்கு ஆட்பதிவுத் திணைக்களம் அறிவுறுத்தல்

வலி.மேற்கு,ஓக.11

தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களுடன் கிராம அலுவலர்கள் விண்ணப்பதாரிகளின் முகவரிகளை உறுதிப்படுத்திய கடிதங்களை இணைக்க வேண்டும் என்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஒரேநாளில் அடையாள அட்டைகள் விநியோகிப்பது தொடர்பாகவும் அடையாள அட்டைகள் தொடர்பாகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் கே.ஜே.வி. ரணசிங்க சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையில் 01-09-2003 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரே நாளில் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடைமுறையில் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களே விண்ணப்பங்களை அதிகமாகக் கொண்டு வருவதாகவும் குறைபாடுகளின் நிமித்தம் ஒரே நாளில் அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியாமல் போனால் பின்னர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட முகவரி ஊடாக விண்ணப்பதாரிகளுடன் தொடர்புகொள்ள முடியாமல் இருக்கின்ற இவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் திணைக்களத்துக்குத் திரும்பி வருகின்றன என்றும்-

ஆதலால், சகலவிதமான அடையாள அட்டை விண்ணப்பங்களுடனும் முகவரிகளை உறுதிப்படுத்திய கிராம அலுவலரின் கடிதங்கள் இணைக்கப்படவேண்டியது அவசியம் எனவும் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதல் தடவையாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த போதும் விண்ணப்பதாரி முதல் தடவையாகத் தான் விண்ணப்பிக்கின்றார் என்ற விசாரணை அறிக்கை பிரதேச செயலர்களினால் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-175)

# ஆடி அமாவாசையன்று கீரிமலைக்கு வரும் பக்தர்களுக்கு அனுஷ்டானங்களுக்கு ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஓக.11

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தைத் கீரிமலை புனித-தீர்த்தக் கரையில் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்று காலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலிருந்து முருகப்பெருமான் எழுந்தருளி வந்து தீர்த்தமாடுவார். அத்தருணம் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ் வர பெருமானும் இங்கு எழுந்தருளி வந்து தீர்த்தமாடுவார்.

இதேவேளை, கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு அன்றையதினம் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. மோட்சதீபம் (நெய்த்தீபம்) ஏற்றப்பட்டு வழிபாடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமான சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். அங்கு அடியார்களுக்கு வழமைபோல இம்முறையும் அன்னதானம் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இறந்த முந்தையரின் ஆத்ம சாந்திக்காக ஆடி அமாவாசையில் தீர்த்தக்கரையில் இருக்கும் சிவாச்சாரியார்களிடம் சங்கற்பித்து, தீர்த்தமாடி, எள்ளும் தண்ணீரும் இறைத்து வழிபடுவது இந்து சமய மக்களால் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய கடமையாகும்.

ஆடி அமாவாசை தீர்த்தத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச சபை கீரிமலைக் கேணியை இறைத்து சுத்தப்படுத்தியுள்ளது. குடிதண்ணீர் வசதியும் சுகாதார வசதிகளும் பக்தர்களின் நலன் கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அடியார்கள் இளவாலை - சேந்தாங்குளம் இராணுவச் சோதனைச் சாவடி ஊடாகவும் தெலலிப்பழை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாகவும் கீரிமலைக்குச் சென்று வர முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருட உற்சவத்தின்போது அடியார்கள் தங்கள் சொந்த வாகனங்களில் கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். காலை நேரத்தில் இவ்வாறு சொந்த வாகனங்களில் செல்ல அனுமதித்துவிட்டு பின்னர் திடீரென வாகனங்களில் செல்லத் தடை விதிக்கப்பட்டது. மிகவும் அதிக எண்ணிக்கையில் வாகனங்கள் சென்றதால் கீரிமலையில் அவற்றை நிறுத்தி வைக்க இடமில்லை என்று கூறியே இடைநடுவில் சொந்த வாகனங்களில் இங்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இம்முறை இதில் என்ன நிலைப்பாட்டைப் பாதுகாப்புப் படையினர் கொண்டுள்ளனர் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இதேவேளை -

சேந்தான்குளம் மற்றும் தெல்லிப்பழைச் சோதனைச் சாவடிகளிலிருந்து கீரிமலைக்கு விசேடபோக்குவரத்து சேவைகளை நடத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை முன்வந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ-135)

# யாழ். சிறைச்சாலைக்கு புதிய அத்தியட்சகர்

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகராக சீனிவாசகம் இந்திரகுமார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் பதவியேற்றுள்ளார்.

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகராகக் கடமையாற்றிய எஸ்.சிவசுந்தரம், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மட்டகளப்பு சிறைச்சாலை அத்தியட்சகராகக் கடமையாற்றிய இந்திரகுமார், சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

சிறைச்சாலையில் கைதிகள் மேற்கொண்டு வந்த போராட்டம் புதிய அத்தியட்சகரின் தலையீட்டினால் நேற்றுமுன்தினம் முதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (8-3-5)

## மீனவர் இளைப்பாற்று மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

வடமராட்சி,ஓக.11

பருத்தித்துறை இன்பருட்டி கடற்கரையில் மீனவர்களுக்கு என புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட மீன் சந்தை, மீனவர் இளைபபாற்று மண்டபம் ஆகியன அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

முன்னைய இந்து கலாசார அமைச்சு, கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றின் நிதியிலிருந்து மீன்சந்தை 5 லட்சம் ரூபா செலவிலும் இளைப்பாற்று மண்டபம் 2 லட்சம் ரூபா செலவிலும் கட்டிமுடிக்கப்பட்டன.

மீன் சந்தையை யாழ்.மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசப்பும் இளைப்பாற்று மண்டபத்தை பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமாரும் திறந்துவைத்தனர். (10-173)

# புலிகளின் சம்பூர் பயணத்துக்கு பாதுகாப்பளிக்கப் படையினர் மறுப்பு

கொழும்பு,ஓக.11

ஓமந்தையிலிருந்து சம்பூருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 95 பேர் செல்வதற்கான பாதுகாப்பு வழங்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக மேற்குறித்தவாறு கண்காணிப்புக்குழுவின் மூலமாக கோரிக்கை விடுக்கப்படுவது வழக்கம்..

ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் வழக்கத்துக்கு மாறான பெருந்தொகையான உறுப்பினர்கள் போகவிருப்பதாலும் அவர்கள் செல்லவிருக்கும் பகுதியின் பதற்றகரமான பாதுகாப்பு நிலவரத்தை உத்தேசித்தும் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெங்கை ஒழிக்க உதவுமாறு அரசியல்துறை அழைப்பு

கரவெட்டி,ஓக.11

நாட்டில் தற்போது விரைவாகப் பரவி வரும் டெங்குக்காய்ச்சலை ஒழிக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வடமராட்சி பிரதேச அரசியல்துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

நாட்டில் சூறாவளி வேகத்தில் பரவி வரும் டெங்குக் காய்ச்சலை ஒழிப்பதற்குப் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், நகரசபைகள், தொழிலாளர் சங்கங்கள் மற்றும் பொது நிறுவனங்கள், தேசிய எழுச்சிப் பேரவை ஆகியன இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் நீர் தேங்கும் இடங்கள், பாவனையற்ற கிணறுகள், குடியிருப்புக்களை அண்டிய பற்றைச் செடிகள் போன்றவற்றைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்வதன் மூலமும் குப்பை கூளங்களை அகற்றுவதன் மூலமும் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகப் பேணுவோம் என அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் ஒருமித்து இம்முயற்சியில் ஈடுபட்டு, பரவிவரும் டெங்குக் காய்ச்சலை ஒழிப்பதன் மூலம் அநியாயமாகக் காவு கொள்ளப்படும் உயிர்களைக் காப்பாற்றுவோமாக என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-70-201)

# வசாவிளான் வைரவர் ஆலயத்தில் மீண்டும் விரைவில் பூசை வழிபாடுகள்

கடந்த 14 வருடங்களாகப் பூசை வழிபாடுகள் ஏதும் இடம்பெறாது உயர்பாதுகாப்பு வலய எல்லைக்குள் அமைந்திருந்த வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி ஆலயத்திற்கு புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. நிர்வாகசபை உறுப்பினர்கள் படையினரின் அனுமதியோடு ஆலயத்தைச் சென்று பார்வையிட்டனர்.

ஆலயத்தின் சகல கதவுகளும் உடைக்கப்பட்டு, பாரிய ஐம்பொன் எழுந்தருளி விக்கிரகம் மிகப்பெரிய காண்டாமணி உட்பட ஆலயத்தின் சகல பூசை உபகரணங்களும் காணாமற்போயுள்ளன என்றும் - ஆலயத்தின் மூலமூர்த்தி மட்டும் எவ்வித சேதங்களும் இன்றிக் காணப்பட்டது என்றும் - ஆலய நிர்வாகசபைத் தலைவர் சு.இலங்கநாயகம் தெரிவித்தார். (8)

## நாளை

ஆடி 28
வியாழக்கிழமை
(12.08.2004)
திதி : துவாதசி
பின்னிரவு 3.03 வரை.
நட்சத்திரம் : திருவாதிரை
பின்னிரவு 2.44 வரை.
சுபநேரம்: 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தன் அறிவைக் கொண்டே மனிதன் வளர வேண்டும். பிறரை எதிர்பார்த்தால் அவலநிலை தான்.

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் செவ்வாய்க்கிழமை, ஓகஸ்ட்-10-2004

| சந்தைப் புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,440.06 | 1,451.84 | (11.78) | (0.81) |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,136 | 2,152.84 | 16.15 | (0.75) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,488.69 | 1,500.87 | (12.18) | (0.81) |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,217.61 | 2,234.37 | (16.76) | (0.75) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 215 | 209.6 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 13.2 | 16.03 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3,373 | 3,639 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 352.7 | 355.6 | | |

**இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| மெற்ரோ பொலிடன்ட் ரிசோஸ் ஹோல்டிங்ஸ் | 5.5% (கடைசி) | 26.08.2004 | 07.09.2004 |

குறித்த திகதியில் முன்னுரிமைப் பங்கு வழங்கலோ ஊதியப் பங்கு வழங்கலோ இடம்பெறவில்லை.

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.


Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6346544 முதல் 6359433 வரை

சீட்டிழுப்பு இல. 57 திகதி 09-08-2004

வெற்றி எண்கள் 7 7 8 6 5 9 சுப்பர் எண் 06

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,47,90,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,47,90,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 5,000/- | 5,35,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,120 | 500/- | 5,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,222 | 50/- | 5,61,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,11,122 | 10/- | 11,11,220/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 114 | 1,000/- | 1,14,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,122 | 100/- | 1,12,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,113 | 20/- | 2,22,260/- |
| மொத்தம் | 1,35,943 | | 48,65,780/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 48,65,780/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,51,02,525/-

தொடர் இல. 7320038 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 12 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6356343-6-88
6353211-0-31
6355701-3-36
6347037-0-47
6353956-8-19





### 7லட்சம் ரூபா செலவில் நூலகக் கட்டடம்

குடத்தனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் புதிதாக நிறுவப்பட்ட நூலகக் கட்டடம் எதிர்வரும் 25ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் கழகத்தினால் சுமார் ஏழு லட்சம் ரூபா செலவில் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

அந்த நூலகக் கட்டடத்தில் நூலக வசதிகளுடன் கணனி உட்பட வேறு பல வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன. (10-118)

### முகமாலைக்கான பஸ்சேவைகள் அதிகரிப்பு

பருத்தித்துறை-முகமாலை பஸ் சேவைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன.

தினமும் அதிகாலை 5.30மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை அரைமணி நேரத்துக்கு ஒரு பஸ் வீதம் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை முகமாலையிலிருந்து கடைசி பஸ் பிற்பகல் 5.30மணிக்கு புறப்படுவதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-173)

### பாடசாலைக்கு தண்ணீர்த்தாங்கி

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் புதிதாக ஒன்றரை லட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர்த் தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் வித்தியாலய பழைய மாணவர்கள் இதற்கான நிதி உதவியினை கட்டம் கட்டமாக வழங்கவுள்ளனர்.

முதற்கட்டத்துக்கான ஒரு தொகுதி நிதி வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் வி.எஸ் ஏகாம்பரநாதன் ஊடாக வித்தியாலயத்துக்கு வந்துசேர்ந்துள்ளது. (ஐ-173)



## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

### தாரண வருஷ ஆவணி மாத திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

**விசேட உற்சவ தினங்கள்**

| | |
|---|---|
| கொடியேற்றம் | ஆவணி 5ஆம் நாள் 21.08.2004 சனிக்கிழமை மு.ப. 11 மணி |
| சப்பரத் திருவிழா | ஆவணி 9 ஆம் நாள் 25.08.2004 புதன்கிழமை |
| வரலட்சுமி விரதம் மஞ்சத் திருவிழாவும் | ஆவணி 11ஆம் நாள் 27.08.2004 வெள்ளிக்கிழமை |
| புன்னைவாகன உற்சவமும் | ஆவணி 14ஆம் நாள் 30.08.2004 திங்கட்கிழமை |
| அனந்தசயனத் திருவிழா | ஆவணி 17 ஆம் நாள் 02.09.2004 வியாழக்கிழமை |
| வேட்டைத் திருவிழா | ஆவணி 20 ஆம் நாள் 05.09.2004 ஞாயிற்றுக்கிழமை |
| தேர்த்திருவிழா | ஆவணி 21ஆம் நாள் 06.09.2004 திங்கட்கிழமை |
| தீர்த்தத் திருவிழா திருக்கல்யாணம் | ஆவணி 22ஆம் நாள் 07.09.2004 செவ்வாய்க்கிழமை |
| மஹாசங்காபிஷேகம் ஆஞ்சநேயர் பொங்கல் | ஆவணி 23ஆம் நாள் 08.09.2004 புதன்கிழமை |
| சங்காபிஷேக உற்சவம் | ஆவணி 27 ஆம் நாள் 12.09.2004 ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகம் |

*தேவஸ்தான மஹோற்சவ பிரதமகுரு:*

வேதாகம கிரியா பூஷணம், கிரியாபானு, கிரியா கலாமணி

ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்

தினமும் மாலை 7 மணிக்கு

தெய்வீக சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்

கிருஷ்ணபரமாத்மாவின் 10 அவதாரங்களின் மகிமை - கா.செல்வவடிவேல்

*குறிப்பு :* தினமும் காலை 9மணிக்கும் மாலை 6 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும். அடியவர்கள் உற்சவ காலங்களில் பூஜைத் திரவியங்களை உபகரித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வீர்களாக.

அனைவரும் வருக! நாரணயனான் அருள் பெறுக!!

கோவிந்த நாம சங்கீர்த்தனம், கோவிந்தா கோவிந்தா!

திருவிழாக் காலங்களில் CTB கோயில் வீதியூடாக சேவையில் ஈடுபடும்.

*பொன்னாலை, சுழிபுரம்.* (35132) (22-11-18) - தேவஸ்தான பரிபாலனசபை.

## கூட்டுறவாளரின் கண்ணீர் அஞ்சலி

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் பணியாளரும் முன்னாள் சங்கத் தலைவரும் தற்போதைய இயக்குநர் சபை உறுப்பினரும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் இயக்குநர்சபை உறுப்பினரும், கல்விச் சேவையின் அதிபருமாகிய தாமரைக்குளத்தடி துன்னாலையைச் சேர்ந்த

### முருகேசு ஸ்ரீஸ்கந்தராசா

அவர்கள் 09-08-2004 இறைபதமடைந்த செய்தி கேட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*கட்டைவேலி - நெல்லியடி, ப.நோ.கூ.சங்கம்.* (C/36554) (32-11-18) பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### முருகுப்பிள்ளை இராசரத்தினம்



தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை இராசரத்தினம் நேற்று (10.08.2004) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் காலமானார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் யோகாம்பிகை, யோகநாதன், கமலாம்பிகை (செம்பியன்பற்று), ஜெகநாதன் (லண்டன்), நகுலாம்பிகை, பரமநாதன் (கபில் உணவகம், பளை), சிவநாதன் (லண்டன்), அமரர் ஞானாம்பிகை (மாவீரர்), அமரர் ரகுநாதன் (மாவீரர்), குகநாதன் (குகன் அழகுமாடம், பளை), செல்லாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநாதன் (தமிழீழப் போக்குவரத்துக் கழகம்), வசந்தகுமாரி, அருந்தவவிநாயகமூர்த்தி, யோகராணி (வவுனியா), அமரர் விநாயகமூர்த்தி, மல்லிகாதேவி, தவநாதன் ஆகியோரது அன்பு மாமனாரும் யோகேஸ்வரன், வினோதரன், விதுசன், காயத்திரி, துஷ்யந்தன், துவாரகன், நிசாந்தன், தேசிகாவதி, அமரர் தேசிகன், தேநிஸா, பாலகுமார், பவானந்தன், பிரியா, பிரிந்தா, நெஜீலன், கபிலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.08.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் தம்பகாமம் மலையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*தம்பகாமம், பளை.* (35127) (24-11-18) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சாந்தநாயகி சிதம்பரலிங்கம்

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி சிதம்பரலிங்கம் நேற்று 10-08-2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை (பரந்தன் உடையார்), தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சிதம்பரலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற திலவதி மற்றும் சிவபாக்கியம் (நோர்வே), ஆகியோரின் அருமைச் சகோதரியும் கவிராஜ், நளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-08-2004) புதன் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*91/9, சங்கத்தானை சங்கம் லேன், சாவகச்சேரி.* (35128) (21-11-18)

தகவல்: வே.சிதம்பரலிங்கம் (கணவர்), கவிராஜ், நளினி (பிள்ளைகள்).

# நிரந்தரமான தீர்வை விரைவில் எட்டுவதற்கு அனைவரும் விவேகமாகச் செயற்படவேண்டும்

## முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

கிளிநொச்சி,ஓக.11

இந்தப் போர் ஓய்வை நிரந்தரப் போர் ஓய்வாக்குவதற்கும் நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கும் அனைவரும் வேகமாகவும், விவேகத்துடனும் செயற்படவேண்டியது அவசியமாகும் என்று முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறை செயலகத்தில் அப்பிரதேச கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கும் ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்களுக்குமான கூட்டம் கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் வே.கனகசுந்தரம் சுவாமி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் வீரமுரசு நிகழ்வு தொடர்பாகவும் சங்கம நிகழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டன.

அந்த வகையில் நேற்று 10ஆம் திகதி வீரமுரசு நிகழ்வு புதுக்குடியிருப்பில் உள்ள கொக்கிளாய் பாடசாலையிலும், எதிர்வரும் 13ஆம் திகதி சங்கம நிகழ்வு புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இக்கூட்டத்தில் கருத்துரைகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், செயலாளர் சி.வேதவனம், முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் பொருளாளர் அற்புதராசா ஆகியோர் வழங்கினர்.

முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று எல்லோரும் ஒன்றுபட நின்று பேரெழுச்சிக் குழுவாக செயற்பட்டதன் விளைவுதான் இந்தப்போர் ஓய்விற்குக் காரணம்.

இன்று தேசிய எழுச்சிப்பேரவையாகச் செயற்படும் நாங்கள் இந்தப் போர் ஓய்வை நிரந்தரப் போர் ஓய்வாக்குவதற்கும் நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கும் வேகமாகவும், விவேகமாகவும் செயற்படவேண்டும். - என்றார். (8)

## திருப்தியற்ற முறையில் இயங்கும் பொது நூலகம்

கிளிநொச்சி,ஓக.11

திருநகரில் உள்ள கரைச்சி பிரதேச சபைப் பொது நூலகம் திருப்தியற்ற முறையில் இயங்கிவருவதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நூலகத்தின் வெளி நூலகர் பகுதியில் சிலகாலம் உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகள் பார்வைக்கு விடப்பட்டிருந்தபோதும் தற்போது இத்தகைய செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதால் வாசகர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகின்றனர்.

மேலும், இந்நூலகத்துக்குத் தரமான நூல்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதில் காணப்படும் அக்கறையின்மையாலும் இதுகுறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையாலும் வாசகர்கள் விசனமடைந்துள்ளனர். (8-301-201)

## சான்றிதழ் வழங்கப்படவில்லை

2003ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் பங்கு பற்றி வலய மட்டத்தில் தெரிவாகிய மாணவர்களில் சிலருக்கு இன்றுவரை அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தற்போது இவ்வாண்டுக்கான தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதனால் கடந்த ஆண்டில் மேற்படி போட்டிகளில் வலய மட்டத்திற்குத் தெரிவாகிச் சான்றிதழ் கிடைக்காத மாணவர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். (08-402-201)

## முல்லைத்தீவு பிரதேச இளைஞர் சேவை மன்றப் போட்டிகள்

புதுக்குடியிருப்பு,ஓக.11

முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இளைஞர் பரிசளிப்புப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

குறுநாடகம், பரதநாட்டியம், கிராமிய நடனம், இளம்பாடகர், கிராமியப் பாடல்கள், நிர்மானிப்பு நடனம், சாஸ்திரியப் பாடல், சாஸ்திரீய வாத்தியம், மேற்கத்தைய வாத்தியம், அறிவிப்பாளர், பேச்சு, கவிதை, சிறுகதை, பாடல் இயற்றல், கட்டுரை, சிறுவர் இலக்கியப் படைப்பு, தொலைக்காட்சி நாடகம், சித்திரம், சிற்பம், புகைப்படங்கள் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் 17வயது முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குகொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை மாவட்ட காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் -

விண்ணப்பங்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் எனவும் மன்றப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8-353)

## மதகுரு தாக்கப்பட்டார்

கிளிநொச்சி,ஓக.11

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானைச் சேர்ந்த இந்து மதகுரு ஒருவர் கடந்த மாதம் 24ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார்.

சம்பவதினம் இரவு 8 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற மேற்படி நபர்கள், குறிப்பிட்ட மதகுருவைக் கோயில் நிகழ்வு ஒன்றினை நிகழ்த்த வருமாறு அழைத்துச்சென்றுள்ளனர்.

பின்பு பனங்கண்டிப் பகுதியில் வைத்து அவர்கள் மதகுருவைத் தாக்கியுள்ளனர். மதகுரு ஒருவாறு தப்பியோடி வந்துள்ளார்.(8-301-201)

## சிறுவர் உரிமை விழிப்புணர்வு செயற்பாடு

வட்டக்கச்சி,ஓக.11

கிளிநொச்சிப் பாடசாலைகளில் சிறுவர் உரிமை தொடர்பான துண்டுப்பிர சுரங்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் திட்டமிட்டுள்ளனர். இச்செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சகல அதிபர்களையும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-405)




### நியாப் திட்டத்தின் கீழ்

## புனரமைக்கப்பட்ட இடங்கள் கிராம அமைப்புக்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி,ஓக.11

'நியாப் திட்டத்தின் கீழ் கடந்த 2002ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்ட செல்வா நகர், நாகேந்திரபுரம் ஆகிய பிரதேசங்கள் நாளை வியாழக்கிழமையும், ஆனைவிழுந்தான், பொன்னாவெளி ஆகிய பிரதேசங்கள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமையும் உரிய கிராம அமைப்புக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் த.இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். நியாப் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் விநோதராஜ், பிரதேச செயலாளர் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றின அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொள்வார்கள். (8-305-201)



பரந்தன் பகுதி மக்களின் குடிதண்ணீர் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு பரந்தன் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டுவரும் பாரிய நீர்த்தாங்கியின் தோற்றம் இது. *(படம் : பரந்தன் செய்தியாளர்)*

## வட்டக்கச்சிப் பிரதேசப் பாடசாலைகளுக்கு முதலுதவிப் பொருள்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஓக.11

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர் முதலுதவிப் பொருள்களை வட்டக்கச்சிப் பிரதேசப் பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு மேற்படி பொருள்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பாடசாலைகளில் மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சியும் இவர்களால் வழங்கப்பட்டது. (8-405)

## நெடுங்கேணி ஆஸ்பத்திரிக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

வலி.தென்மேற்கு,ஓக.11

நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வந்த டாக்டர் ஆர்.ஜே.நத்தானியல் எதிர்வரும் 15ஆம் திகதி தமது ஒப்பந்த காலம் முடிவடைவதால் பதவியிலிருந்து விலகிச் செல்லவுள்ளார்.

இவரின் இடத்திற்கு புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவரும் டாக்டர் எஸ்.உமாபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

வேலணை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு வாரத்தில் இரு தினங்கள் - செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் - புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றுவார். இதற்கான பணிப்புரையை யாழ். சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் விடுத்துள்ளார்.(ஜ-135)

## வன்னியில் பெற்றோல் விலை உயர்வு

கிளிநொச்சி,ஓக.11

வன்னிப் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாகப் பெற்றோலின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

80 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோல் தற்போது 90 ரூபாவுக்கு விற்கப்பட்டு வருகின்றது. (8-201)

## முள்ளியவளை வைத்தியசாலையைப் புனரமைக்க நிதியுதவி

முள்ளியவளை,ஓக.11

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கான நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பானியக் குழுவினர் முன்வந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அண்மையில் வருகைதந்த ஜப்பானியக் குழுவினர் மேற்படி வைத்தியசாலையைப் பார்வையிட்டதையடுத்து அதனைப் புனரமைக்க நிதியுதவி வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். (8-201-341-203)

## ஊனமுற்றோர் சான்றிதழ் பெறுவதற்கு ஏற்பாடு

விசுவமடு,ஓக.11

வடக்கு - கிழக்கு சமூக சேவைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உடல் ஊனமுற்றோர் சான்றிதழ் பெறுவதற்கான வைத்திய பரிசோதனையினை நடத்தக் கண்டாவளை பிரதேச செயலகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாகக் கடந்த மாதம் 31ஆம் திகதி தருமபுரம் அரசினர் வைத்தியசாலையில் கண்பரிசோதனையை வைத்திய கலாநிதி பத்மலோஜினி மேற்கொண்டார். (8-402-201)

## வீதிகள் பலவும் புனரமைக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஓக.11

ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பன், பெரிய சாளம்பன் கிராமங்களுக்குச் செல்லும் வீதிகள் புனரமைக்கப்படாததால் அப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி வீதிகள் புனரமைக்கப்படாததால் இப்பகுதி மக்கள் மழைகாலங்களில் தமது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்துச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். (8-341-201)

★ ★ ★

எக்கந்தபுரம் சந்தியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையினால் சேதமடைந்து காணப்படுகின்றது.

குறித்த வீதியின் இருமருங்குகளும் 100 மீற்றர் வரையான தூரத்திற்குச் செங்குத்தாக அரிக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வீதியால் செல்லும் வாகனங்கள் விபத்துக்களை எதிர்நோக்கும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இந்த வீதி புனரமைக்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-384-201)

★ ★ ★

கிளிநொச்சி,ஓக.11

கரைச்சி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழுள்ள திருநகர் பிரதான வீதி கடந்த 15 ஆண்டுகாலமாக எதுவித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதி கிளிநொச்சி நகரிலிருந்து மேற்கே உருத்திரபுரம் வரையுமான பாரிய பிரதேசத்தை இணைக்கின்றது. இதனால் இவ்வீதியில் சனநடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில் வீதி இவ்வாறு திருத்தப்படாது இருப்பதால் வீதிப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (8-201-301)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவி!

விசுவமடு,ஓக.11

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மற்றும் 'வாச்' நிறுவனங்களின் அனுசரணையுடன் உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டிலேயே இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பரந்தன், பெரியகுளம் குமரபுரம் ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த 192 வரையான குடும்பங்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன. (8-402-201)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவிற்கும் உரும்பிராய்ச் சந்திக்கும் இடையில் பலாலி வீதியிலிருந்து மூன்றாவது ஒழுங்கையொன்றில் 2½ பரப்புக் காணி தனிக்கிணற்றுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:222 2478.
(35046)

## வீடு வாடகைக்கு

401/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கு உகந்தது. தொடர்புகளுக்கு: திருமதி க.மங்கையர்க்கரசி, 140 (320), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி இலக்கம்: 021 - 4590516.
(35110)

யாழ்ப்பாணம், வெலிங்டன் சந்திக்கு அருகில் 4அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. காரியாலய பாவனைக்கும் உகந்தது. தொடர்பு: இல: 37(351), மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(35113)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று (11.08.2004) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி; P.ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி; ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக T.P.: 222 3529, 222 2867, 0776090926.
(35007)

தரமான Prima Broiler (ரூபா40/=), பேட்டுக் குஞ்சுகள் (ரூபா 60/=), 16.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் முருகன் - சாவகச்சேரியிலும், குட்டி பாம் - வடடுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(34916)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல.7, சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோயிலடியில் 3¼பரப்புக் காணியில் மூன்று அறை, மண்டபத்துடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

விலையை நேரில் பேசித் தீர்மானிக்கலாம தரகர்கள் தேவையில்லை. முன்பு பார்த்தவர்களும் சந்திக்கலாம். நேரம் பிற்பகல் 5 மணியிலிருந்து 7 மணி வரை.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை**
இல. 43, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 5102
(யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மையில்)
(C/36523)(42)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகான Great Dane ஆண் நாய்க்குட்டி உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(35012)

## தவறிவிட்டது

04.08.2004 அன்று கைதடியிலிருந்து யாழ்பபாணம் வரும்வழியில் முத்துத்தம்பி மனோராணி என்பவரது பேர்ஸும், தே.அ.அட்டையும் (இல 663661183V), விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கைதடி வர்த்தக நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(35117)

திருமதி ஆரோக்கியறூபி அமலதாஸ், செல்வி யேசுநாயகம் ஆன் ஜெனிசியா ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள், அஞ்சல் அடையாள அட்டைகள் என்பன 05-08-2004 அன்று யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: Aruns Photo, மாரீசன்கூடல், மாதகல். தொ.பே.இலக்கம் 0602 - 213227.
(35091)

வாமதேவன் பிரதீப்ராஜ் என்பவருடைய தே.அ.அட்டை இல.(841103149V), வி.அ.அட்டையும் ஒரு தொகைப் பணமும் 25.07.2004 அன்று கோண்டாவில் டிப்போ வளாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் டிப்போ பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கொடுத்து உதவவும்.
(35086)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1963இல் பிறந்த, பூராடம் (4ஆம் பாதம்) நட்சத்திரம், டோகாவில் தொழில்புரியும் (தற்போது யாழ்ப்பாணம் வந்திருக்கும்) மணமகனுக்கு படித்த, நற்பண்புள்ள, 37 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: சி.பாலச்சந்திரன், "தாயகம் இல்லம்", குலானை, கரவெட்டி மத்தி, நெல்லியடி.
(35092)

## மாவிலைத் தத்தியைக் கட்டுப்படுத்தத் தெளிகருவி

வலி.தென்மேற்கு,ஓக.11

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்திற்கு மாவிலைத் தத்தியைக் கட்டுப்படுத்துவதற்குக் கிருமிநாசினி தெளிப்பதற்கான தெளிகருவி ஒன்றை யாழ். விவசாயத் திணைக்களம் வழங்கியுள்ளது.

இத்தெளிகருவியை இப்பகுதி மக்கள் பெறறுத் தங்கள் வீட்டு மாமரங்களில் ஏற்படும் மாவிலைத் தத்தியைக் கட்டுப்படுத்த முடியும் என்று பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-135)

## மனமார்ந்த நன்றிகள்

மந்துவில் வடக்கு. கொடிகாமத்தைச் சேர்ந்த **சின்னத்தம்பி பரமசாமி** ஆகிய நான் எனது மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்கான பதிவு உரிமையைக் கடந்த 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி முதலாகப் பதிவுசெய்து புத்தகத்தைப் பெறுவதற்குப் பலமுயற்சிகள் எடுத்தும் நிறைவேறாது மனக்கவலையுடன் இருந்தவேளையில்–

இந்தக் கஷ்டங்களை யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினருடன் தொடர்பு கொண்டு முறையிட்டபோது –

அந்தக் குழுவினரின் அயராத கடும் முழு முயற்சியின் சேவையினால் 07.08.2004 அன்று எனது உரிமைப்பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டேன். ஆகவே, அவர்களது சேவையும் சேவை மனப்பான்மையும் மேலும் சிறப்புற உளமார வாழ்த்துகின்றேன்.

(35122)(26-14) - **சின்னத்தம்பி பரமசாமி**

## முக்கிய அறிவித்தல்

Prima ஒருநாள் கோழிக்குஞ்சுகள். யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள் நல்லூர் பாம் சென்ரர் (நல்லூர் வீடியோ சென்ரர்) மட்டுமே.

போலியான பெட்டிகளில் வரும் Prima கோழிக் குஞ்சுகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

*குறிப்பு:*

**இரண்டு தடுப்பூசி போடப்பட்ட கோழிக்குஞ்சுகள் விலை**

**Broiler** ரூபா 40/=,
பேட்டுக்குஞ்சுகள் (சிகப்பு/வெள்ளை) ரூபா 60/=

**CEYLON GRAIN ELEVATORS LTD.**
15, Rock House Lane,
Colombo-15.

**Nallur Farm Centre,**
(Nallur Video Centre)
19, Murugesar Lane,Nallur.
(35013)(34-24-14)




## யாழ்.பல்கலைக்கழக

### — வெறுவெளி —

அரங்கக் குழுவின்

## "காலனை வென்ற காரிகை"

(இசை நாடக ஆற்றுகை)

வழிப்படுத்தல் - திரு.நா.விமலநாதன்

இடம்: கைலாசபதி கலையரங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

காலம்: இன்று (11.08.2004) புதன்கிழமை

நேரம்: மாலை 4.30மணி

பிரவேசம்: இலவசம்

விளம்பர அனுசரணை:~ **பவர் செலுலர்,**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/36540)(42-14-26)

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

14.08.2004ஆம் திகதி லண்டன் மாநகரில் நடைபெறும் **பூபாள ராகங்கள்** கலை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க லண்டன் சென்றுள்ள ஈழநல்லூர் அருணா இசைக்குழு இசை இயக்குநர்

**"தேனிசைச் சக்கரவர்த்தி", "இசைக்கோகுலம்"**

# அருணா

அவர்களை

**உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



**மகிழ்ச்சியுடன் வாழ்த்துபவர்கள்:**

நிகழ்ச்சித் தொகுப்பாளர் அரியாலையூர் **S.K.விஜய்**

**இசை வாத்தியக் கலைஞர்கள்:**

| | |
|---|---|
| ஓகன் | A.ஜெகதீஸ் |
| பேஸ் கிற்றார் | A.நேமிநாதன் |
| ஒக்ட பாட் | A.கேதீஸ் |
| லீட் கிற்றார் | A.சதீஸ் |
| தபேலா | S.விமல்சங்கர் |
| | S.ஜெனில் சங்கர் |
| கொங்கோ | S.நிமலன் |
| றம்ஸ் | J.ஜெயக்கப் |
| ரமறின் | V.வேலாயுதம் |

**குரல் இசைக் கலைஞர்கள்:**

நெல்லையூர் விஜயன்
K.S.கோடீஸ், A.S.சுந்தர்
V.S.மோகன் இசைக்குயில் K.பிரபாலினி

**சேகர் சவுண்ட் அன் மியூசிக்கல்** உரிமையாளர் - **P.குமணதீபன்**

ஒலி இயக்குநர் - **சோபி, சுந்தர்**

லக்ஷி வாகன உரிமையாளர் - **முருகா.**

(35120) (24-14-26)

# தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவச்சிலை இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலயத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனால் திரைநீக்கம் செய்துவைக்கப்படுகின்றது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரை இன்றைய நாளில் நினைவு கொள்வோம்.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே..." என்று இளைஞர்கள் அனைவரையும் அழைப்பு விடுத்த பெருமை நவாலியூர் சோமசுந்தரப் புலவரையே சாரும். இவர், நவாலியில் வன்னியசேகர் மரபினராகிய கதிர்காமர் என்பவருக்கு 1878ஆம் ஆண்டு பிறந்தார். இவர், கல்வி கற்கும் காலத்திலேயே கவிபாடும் ஆற்றல் மிகுந்தவராகக் காணப்பட்டார். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிப் பல மாணவர்களை உருவாக்கினார். இவர் சுமார் பதினையாயிரம் பாடல்களுக்கு மேல் பாடி அனைத்து உள்ளங்களையும் கவர்ந்தவர்.

இவர் இயற்றிய நூல்கள் பல உள. அவற்றில் நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு, ஐம்புல வேடக்கும்மி, கந்தவனக்கடவை, நான்மணி மாலை, மருதடி விநாயகர் பாமாலை, கல்லுண்டாய் வைரவர் பதிகம், கதிரைமலை வேலவர் பதிகம், அட்டகிரிப் பதிகம், கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சி, சிறுவர் செந்தமிழ், கதிரைச் சிலேடை வெண்பா, நாமகள் புகழ் பாமாலை போன்ற பாடல் நூல்கள் பெருமதிப்பையும் புகழையும் "தங்கத்தாத்தா"வுக்கு ஈட்டிக் கொடுத்தன.

ஒரு தடவை புலவரைப் பாராட்டும் வைபவம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 1940ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்தது. அக்கூட்டத்துக்கு வருகைதந்த பெரிய கல்விமான்களாலும், கூட்டம் பார்க்க வந்த ஜன சமுத்திரத்தாலும் மண்டபமே நிரம்பி வழிந்தது.


இவ்விழாவுக்குப் பாராட்டு வழங்க வருகை தந்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. தமது இயல்பான இனிய குரலிலே புலவரின் பாடல்கள் சிலவற்றை வரிவரியாக எடுத்து, சொற்களை எல்லாம் பிரித்து எடுத்து தேன் மாரி பொழிவதுபோல் இரசனையாகப் பேசினார். புலவரே தன்னை மறந்தநிலையில் பண்டிதமணியைக் கட்டித்தழுவி, முத்தமிட்டு, கண்ணீர்விட்ட காட்சியைப் பண்டிதமணியின் மாணாக்கர் பரம்பரையினர் இன்றும் கூறுவார்கள்.

புலவருக்குப் பண்டிதமணி என்றால் உயிர். அதேபோன்று பண்டிதமணிக்கும் புலவரிடத்து உயிருக்குயிரானவர். இருவருமே பெரும் கேண்மையினர். ஒருவரை ஒருவர் விட்டு அகலாத மனம் படைத்தவர்கள்.

**கா.சிவபாலன்**

புலவர் நோய் முற்றி மரணத்தறுவாயில் இருந்ததை அறிந்தார். பண்டிதமணி உடனே புலவரிடம் ஓடிச்சென்றார். பண்டிதமணியைக் கண்டதும் புலவர் கை உயர்த்தி விம்மிதம் உற்றார். புலவரின் நெற்றியிலே திருநீறு பூசி திருமுறை ஓதி, ஐந்தெழுத்து ஓதி, ஆவன செய்தவர் பண்டிதமணி. "தங்கத்தாத்தா" சோமசுந்தரப்புலவரின் ஆத்மா 1953ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தது. அந்நேரத்தில் புலவரின் பிரிவு குறித்து,

*"தாரமாய்த் தாயானாள் கையென் றொரு தமிழின்*
*ஆரமாய் நின்றினித்த அம்புலவன் - நேரமாய்*
*விட்டதென விட்டெம்மை விண்ணுலகு நண்ணினான்*



*நட்டமினி மண்ணுலகில் நாம்"*

என்று பாடினார் பண்டிதமணி.

ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள் மீது புலவர் பாடிய பாடல்கள் அதி உச்சமானவை.

நாவலர் பெருமான் மீது பாடிய
*"அன்னநடை பிடியிடை யழகுநடை*
*யில்லாவென வகற்றி யந்நாட்"*
என்னும் பாடல் இன்று ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் தமிழ்மொழி கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் தெரிந்ததாகும்.

"தங்கத்தாத்தா" நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பெருமானைப் போற்றி அன்னார் மறைந்து அரை நூற்றாண்டுக்குப் பின் சிலையெடுக்கும் பெரும் மக்களையும், நவாலி மகாவித்தியாலய அதிபரையும் பாடசாலைச் சமூகத்தையும் போற்றுவோம்; பாராட்டுவோம். புலவர் பெருமானின் "சிறுவர் செந்தமிழ்" நூல் பாடல் நூலாக வெளிவர கல்வி உலகு மீண்டும் முயற்சிக்க வேண்டுமென விண்ணப்பம் செய்வோம். ✦

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறு மீளாய்வுக்கு அடுத்தவாரம் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஓக.11

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பம் கோரப்படுவது பற்றிய அறிவித்தல் அடுத்தவார வர்த்தமானியில் வெளியிடப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.விஜயசிறி தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அதிபர்கள் ஊடாக அனுப்பிவைக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார். இந்த வருடம் சித்தியடைந்துள்ள மாணவர்களுக்கு இந்த வருடத்திற்குள் பல்கலைக்கழக அனுமதி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளப் படவுள்ள மாணவர்கள் எண்ணிக்கையை இம்முறை அதிகரிக்கவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஹெல உறுமயவின் கூட்டம் குழம்பியது

ஜாதிக ஹெல உறுமயவின் அதிருப்திக் குழு நேற்றுமுன்தினம் மஹரகம இளைஞர் சேவை மன்றக் கேட்போர் கூடத்தில் நடத்திய கூட்டம் ஒன்று மாற்றுக் குழுவினரின் தலையீட்டால் குழம்பியது.

கட்சியின் அதிருப்திக் குழுவினர் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது மண்டபத்திற்கு வெளியில் ஜாதிக ஹெல உறுமயவினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தை நடத்தியவர்கள், உள்ளே கூட்டத்தினுள் நுழைந்து அங்கு தமது எதிர்ப்பைக் காட்டினர். இதனால் பதற்றம் ஏற்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு தோன்றும் சூழ்நிலையும் உருவானது; கூட்டம் குழம்பியது. (க-8)

# சுன்னாகம் தபாலகப் புனரமைப்புக்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கப்படும்

## சிவாஜிலிங்கம் எம்.பி. உறுதி

வலி.தெற்கு,ஓக.11

சுன்னாகம் தபால் நிலையத்துக்குரிய காணி கொள்வனவு செய்யப்பட்டவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அபிவிருத்தி நிதியில் இருந்து ஒரு கோடியே 20 லட்சம் ரூபா நிதியை இதன் கட்டடப் புனரமைப்பு வேலைகளுக்காக வழங்க நடவடிக்கை மேற்கொள்வேன்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் தபாலகக் காணிக் கொள்வனவு தொடர்பாக சுன்னாகம் கதிரைமலை சிவன் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுன்னாகம் தபால் நிலைய அதிபர் ஐ.லோகஞானம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் க.சிவாஜிலிங்கம் மேலும் கூறியதாவது:-


நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு காணியைக் கொள்வனவு செய்யவோ சுவீகரிப்புக்கு நட்டஈடு செலுத்துவதற்கோ அரசின் பணத்தை எந்தவிதத்திலும் பாவிக்கமுடியாது என்பது இன்றைய சட்டதிட்டமாகும். ஆனால், கட்டடங்கள் கட்ட, புனரமைக்க பண ஒதுக்கீடு செய்யலாம்.

நகரத்தின் அபிவிருத்திக்காக இப்பொழுது உள்ள சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ் காணி ஒன்றைச் சுவீகரிப்பதை எவரும் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து மறுக்கமுடியாது. நகர அபிவிருத்திக்கான சுவீகரிப்பை எந்தக் கட்டத்திலும் ஆட்சேபிக்க முடியாது. வேண்டுமானால் அதற்குரிய நஷ்டஈட்டைக் கோரலாம்.

சுன்னாகம் தபாலகம் நூறு வருடங்களுக்கு மேலாக இவ்விடத்தில் செயற்பட்டு வருகின்றது. அதன் கட்டடத்தைப் பணம் கொடுத்துக் கொள்வனவுசெய்ய முன்வந்தமை பாராட்டுக்குரியது.

இன்று பல பிரதேச செயலகங்களுக்குப் பொதுமக்களிடம் இருந்து காணிகள் நன்கொடைகளாகப் பெறப்பட்டுத்தான் கட்டடங்கள், அலுவலகங்கள் கட்டப்படுகின்றன. கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி போன்ற பிரதேச செயலகங்களுக்குரிய காணிகள் பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு பரப்புக் காணியில் அமைந்துள்ள இத்தபாலகம் கொள்வனவு செய்யப்பட்ட பின் நவீன தொழில்நுட்ப இயந்திர அமைப்பைக் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய தபால் நிலையமாக மாற்றி அமைப்பதற்கான கட்டடங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து தருவேன் - என சிவாஜிலிங்கம் எம்.பி. கூறினார். (ப-8-152)



சுன்னாகம் தபாற்கந்தோருக்கான காணியைப் பெறுதல் தொடர்பான கூட்டம் சமீபத்தில் சுன்னாகம் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# ஏறாவூரில் வயோதிபமாது படுக்கையில் சுட்டுக்கொலை!

## உடன் இருந்த அவரது மகள் காயம்

ஏறாவூர்,ஓக.11

ஏறாவூர், மக்காமடி பிரதேச உள் வீதியில் வசித்துவந்த வயோதிபப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் அதிகாலை இனம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஹயாத்து முகம்மது ஆசியா உம்மா (வயது 69) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொரு பெண்ணான முஹம்மது லெவ்வை பௌசியா என்பவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் ஆசியா உம்மாவின் மகளாவார்.

அதிகாலை 2.30 மணியளவில் முகமூடி அணிந்த ஆயுதபாணிகள் வீட்டுக்குள் சென்று தூங்கிக்கொண்டிருந்த இப்பெண்கள் இருவரையும் ரி.56ரக துப்பாக்கியினால் சராமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தனிப்பட்ட தகராறின் விளைவாக இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட வயோதிப மாதுவின் மகன் ரஷாக் என்பவரைத் தேடிவந்த சந்தேக நபர்களே அவர் இல்லாத பட்சத்தில் தாயாரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுத தரும் உப முகவரான ரஷாக், பலரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்காமல் இழுத்தடித்து வந்தார் எனவும், அதன் காரணமாகவே இவரைக் கொல்ல முயற்சிக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

நான்கு நாள்களுக்கு முன் பெண்ணொருவர் இவரதுவீட்டுக்கு வந்து தன்னை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறிப் பணம் வாங்கி ஏமாற்றிவிட்டார் எனத் தெரிவித்து இவருடன் சண்டை பிடித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு கோஷ்டி மோதலில் இவர் சம்பந்தப்பட்டிருந்தார். அம்மோதலின்போது எதிராளிகளைக கைக்குண்டு வீசிக் காயப்படுத்தியதற்காக சிறைத தண்டனையும் அனுபவித்தார். அதற்குப் பழி வாங்கும் விதத்திலும் ஒரு குழுவினரே இவரைக் கொலைசெய்ய வந்திருக்கலாம் எனவும் வேறுசில தகவல்கள் தெரிவித்தன. (க)

# கிணறு வெட்டியபோது புராதன பானைகள் மீட்பு

நவாலி,ஓக.11

ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் கிணறு வெட்டப்படும்போது இரண்டு புராதன பானைகள் கண்டெடுக்கப்பட்டன.

இப்பகுதியில் ஒருவர் தனது காணியில் கிணறு வெட்டினார். தரைமட்டத்திலிருந்து சுமார் 6அடி ஆழம் வெட்டப்பட்டபோது ஓரிடத்திலிருந்து திடீரெனத் தண்ணீர் பீறிட்டது. அந்த இடத்தில் மண்ணை அகற்றியபோது பனங்கொட்டு ஒன்று தென்பட்டது. அதனை வெளியே இழுத்துப் பார்த்தபோது அதற்குள் இருபானைகள் இருந்தன.

இவற்றில் ஒரு பானையில் கோடுகள், சதுரங்கள், முக்கோணங்கள் வரையப்பட்டிருந்தன. மறுபானையில் கோடுகள் இல்லாமல் சிறியதுவாரமொன்று காணப்படுகின்றது.

இந்தப் பானைகள் தொடர்பாக ஆனைக்கோட்டைக் கிராமசேவையாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்று முன்தினம் அவ்விடத்துக்குச் சென்று கிராம சேவையாளர் இரு பானைகளையும் பொறுப்பேற்றதுடன் கிணறு வெட்டும் பணியை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். (ஒ-100)

# கடவுச்சீட்டுகள் விநியோகம் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது

## குடியகல்வு - குடிவரவுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,ஓக.11

கடவுச் சீட்டுகள் விநியோகம் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதெனக் குடியகல்வு - குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி பி.ஜினதாஸ தெரிவித்ததாவது:-


வழமையான நடைமுறையின் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் தமது கடவுச் சீட்டுக்களை 5 நாள்களுக்குள்ளேயே பெற்றுக் கொள்ளமுடியும். எமது திணைக்களம் கடவுச் சீட்டுத் தொடர்பாக மாதமொன்றுக்கு சுமார் ஆயிரம் விண்ணப்பங்களைப் பெறுகின்றது.


கடந்த ஆறு மாதங்களில் கடவுச்சீட்டு விநியோகத்தில் 85.2 கோடி ரூபாவுக்கு மேல் வருமானம் பெற்றுள்ளது - என்றார். (8-13)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004
## மாதிரி வினாத்தாள் இல.08
வினாத்தாள் -I நேரம் 45 நிமிடங்கள்


**பக்கம் 1**


**★ 1-2 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்ட அடைப்புக்குள் இடம்பெறாத உருவை அதன் முன்னால் உள்ள நான்கு உருக்களில் இருந்து தெரிந்து கீறிடுக.**

01)


02)


**★ 3-4 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் எந்த உரு முகம்பார்க்கும் கண்ணாடியின் முன்னால் வைக்கும்போது மாற்றமின்றி அதேபோல் தோன்றக்கூடியது எனத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.**

03)


04)


**★ 5-6வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் நெய்யரியை அடிப்படையாகக் கொண்டவை. இந்நெய்யரியில் A தொடக்கம் Eவரை பெயரிடப்பட்டுள்ள வெற்றிடங்களில் எண்களை இடும்போது ஒவ்வொரு நரலினதும் நிரையினதும் கூட்டுத்தொகை 200 ஆகும். ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துநிற்கும் இலக்கத்தைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | 41 | 26 | 53 | E |
| 41 | 33 | 34 | D | 57 |
| 50 | 42 | C | 47 | 19 |
| 47 | B | 50 | 25 | 37 |
| A | 43 | 48 | 40 | 39 |

05) வெற்றிடம் A இற்குப் பொருத்தமான எண்?
1) 19 2) 30 3) 31 4) 32

06) வெற்றிடம் B இற்குப் பொருத்தமான எண்?
1) 35 2) 38 3) 41 4) 44

**பக்கம் 2**

**★ 7-8வரையான வினாக்கள் கீழேயுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டவை. அதனை வாசித்து விளங்கி வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.**

> காந்தன் மிகவேகமாக ஓடினான். சிவராமன் காந்தனை முந்திக் கொண்டு ஓடிச்சென்றான். திவாகர் காந்தனுக்குப் பின்னால் ஓடிச் சென்றபோதும் சங்கருக்கு முன்னால் ஓடினான். போட்டி முடிவதற்கு சற்றுமுன்னர் வரை சங்கருக்குப் பின்னால் ஓடிவந்த முகலன் மிக வேகமாக ஓடி ஓட்டப்போட்டியில் முதலாமிடத்தைத் தட்டிக்கொண்டான்.

07) போட்டியில் இரண்டாம் இடம் பெற்றவர் யார்?
1) திவாகர் 2) காந்தன் 3) சிவராமன்


08) போட்டியில் மூன்றாம் இடம் பெற்றவர் யார்?
1) சிவராமன் 2) காந்தன் 3) சங்கர்


**★ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான சொல்லைச் சரியாக விவரிக்கக்கூடிய கூற்றைத் தெரிந்து இதன்கீழ் கோடிடுங்கள்**

09) ஊர்வன என்பது?
1) கால்கள் அற்ற பிராணி
2) கால்கள் இருந்தும் பயணஞ் செய்யும்போது வயிற்றுப்பகுதி பூமியில் படும் பிராணி 3) பாம்புகள்

10) "நாட்டுக்கே உரித்தான" என்பது
1) நாடொன்றில் இருக்கும்
2) நாடொன்றைத் தாய்நாடாகக் கொண்டது
3) நாடொன்றில் இருக்கும் ஆனால், வேறுநாட்டுக்குச் சொந்தமானது என்பதனைக் குறிக்கும்.

**★ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் அடுத்துவரும் உருவைத் தரப்பட்டுள்ள உருக்களில் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுங்கள்.**

11)


12)


13) "அறிவு" என்பதனால் கருதப்படுவது?
1) ஒழுக்கம் 2) புத்தி 3) அருவி

14) "எழுத்தறிவுக்கு என்பதனால் கருதப்படுவது
1) எழுதுவதற்கு 2) கற்பதற்கு 3) எழுத்துக்கள் எண்ணுவதற்கு

**★ கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள நிரையைப் பார்த்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்**

77K 77J 55J 75K JK 6 KJ 55 5J

15) இங்கு குறைவாகத் தரப்பட்டுள்ள இலக்கத்தை தெரிந்து வட்டமிடுங்கள்


16) இரண்டாவது K எழுத்திற்கு முன்னாலுள்ள இரு எண்களின் கூட்டுத் தொகை எவ்வளவு?


17) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்தும் விடையைத் தெரிவுசெய்க.
A) சிங்கத்தின் சத்தத்தால் பயமடைந்த எருது திரும்பிப் பார்க்காமல் ஓடியது.
B) மலைச்சாரிவில் புல் மேய்ந்துகொண்டிருந்த எருதைக் கண்ட சிங்கம் சந்தோசமடைந்தது.

**பக்கம் 3**


C) சிங்கமானது மிகவும் பசியால் வாடியது.
D) சிங்கம் பசுவைப் பிடிக்க வேகமாகப் பாய்ந்தது.
E) அது இரையைத் தேடி மலைச்சாரிவில் ஏறியது.
F) பாய்ந்த வேகம் அதிகமானதால் சிங்கம் சேற்றில் சிக்கியது.
1) CEDBAF 2) CEBDAF 3) CEBDFA


**★ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுங்கள்**

18)


19)


**★ கீழே தரப்பட்டுள்ள கோலங்களில் இடைவெளிகளுக்கு பொருத்தமான எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்**

20)


21)


**★ கீழே தரப்பட்டுள்ள பிரசினங்களைத் தீர்க்கும்போது கிடைக்கும் விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுங்கள்**


22) காசு நாணயங்கள் மாத்திரமுள்ள ஒரு உண்டியலில் 400 காசு நாணயங்கள் இருந்தன. அதில் 50 சத நாணயங்களைப் போன்று இருமடங்கிற்கு 40 கூடுதலாக 1 ரூபா நாணயங்களும் மிகுதி 2 ரூபா நாணயங்களும் இருந்தன. அதிலிருந்த 1 ரூபா நாணயங்களின் எண்ணிக்கை 240 எனின், உண்டியலில் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?
1) ரூபா 50 2) ரூபா 410 3) ரூபா 120

23) சைக்கிள்காரன் ஒருவன் மணிக்கு 16 கிலோமீற்றர் ஒரே வேகத்தில் 40 கிலோமீற்றர் தூரம் பிரயாணஞ்செய்தான். அவன் பயணம் தொடங்கியது மு.ப. 10.45 இற்கு எனின், பிரயாணத்தை முடித்த நேரம் எவ்வளவு?
1) 13:15 மணி 2) மு.ப.1.15 3) பி.ப.1.30

24) மீன் 5 கிலோகிராம், இறைச்சி 3 கிலோகிராம் என்பவற்றின் விலை ரூபா 740 ஆகும். மீன் 1 கிலோ கிராமின் விலை இறைச்சி 1 கிலோகிராமை விட ரூபா 20 கூடுதலாகும். மீன் 1கிலோகிராமின் விலை எவ்வளவு?
1) ரூபா 100 2) ரூபா 80 3) ரூபா120

**பக்கம் 4**


25) ஒருபிள்ளை இவ்வாறான உருவொன்றை முற்றத்தில் வரைந்து கட்ட இலக்கம் 1இல் ஆரம்பித்து இரண்டு கட்டங்கள் விட்டு முன்னால் உள்ள கட்டத்துக்குப் பாய்ந்து மீண்டும் பின்புறக் கட்டத்துக்குப் பாய்கிறான். அவன் இவ்வாறு ஆரம்பத்திலிருந்து ஒழுங் காக முன்னும் பின்னும் பாய்ந்த கட்டங்களின் இலக்கங்கள் சில முறையே 4,3,6,5,8,7 ஆகும். அதற்கமைய அவன் 8 ஆவது தடவை முன்னால் பாயும் கட்டத்தின் இலக்கத்தை எழுதுங்கள்....................



26)

அருகேயுள்ள உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?..................


**★ இலக்கம் எழுதப்பட்ட சதுரமுகிகள் இரண்டு இங்கு தரப்பட்டுள்ளன. அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.**





27) இங்கு 4ஆவது இலக்கமுள்ள முகத்திற்கு எதிர் முகத்திலுள்ள இலக்கம் எது?.........................

28) இங்கு 5 ஆவது இலக்கமுள்ள முகத்திற்கு எதிர் முகத்திலுள்ள இலக்கம் எது?.........................

**★ கீழே உருவில் உள்ள தராசின் இருபக்கத் தட்டுகளிலும் உள்ள பொருள்களின் நிறை சமமாகும். இதனை விளங்கிக்கொண்டு கீழே தரப்பட்டுள்ள தராசுகளின் இருபக்கங்களிலும் உள்ள நிறை சமமாவதற்காக அடையாளத்தின் மூலம் காட்டப்படும் வெற்றுத்தட்டுக்கு இடவேண்டிய பொருள்கள் அடங்கிய விடையைத் தெரிந்து கீழ்க் கோடிடுக.**




29)


30)


**பக்கம் 5**

31) விதுனை மாணவர்களும் ஆசிரியர்களு
காரணமாக அமையக் கூடிய பொருத்
1) விதுன் பரீட்சையில் அதிக புள்ளி
2) விதுன் விரும்பத்தகாத செயலில்
3) அவன் போட்டி நிகழ்ச்சி ஒன்றில் பே

✪ கீழே செவ்வகத்தின் மூலம் காட்டப்ப
கணிதத்திற்கு மாத்திரம் விருப்பமுள்
✪ வட்டத்தின் மூலம் காட்டப்படுவது சித
விருப்பமுடைய பிள்ளைகளாவர்.
✪ முக்கோணத்தின் மூலம் காட்டப்படுவது
விருப்பமுடைய பிள்ளைகளாவர்.
அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களு
பட்டுள்ள விடைகளில் தெரிந்து கீழ்கே




32) கணிதத்திற்கும் சித்திரத்திற்கும் விருப்
எண்ணிக்கை எவ்வளவு?
1) 10 2) 25 3) 15


33) மூன்று பாடங்களுக்கும் விருப்பமுடைய பி
எவ்வளவு?
1) 15 2) 20 3) 10

34) வகுப்பில் இரண்டு பாடங்களுக்கு விருப்
எண்ணிக்கை எவ்வளவு?
1) 10 2) 30 3) 15

**★ இங்கு தரப்பட்டுள்ள கட்டங்களில் உள்ள
பெறுமதி கொடுக்கப்பட்டுள்ளது அவ்வுருக்க
தொகை குறுக்காகவும் நெடுக்காகவும் தரப்
கூட்டுத்தொகை தரப்படாத இடங்களுக்கு உ
விடைகளில் இருந்து தெரிந்து அதன்கீழ்**

35)


**பக்கம் 6**

36)


**★ கீழே தரப்படும் விவரத்தை வாசித்து கே
உரிய சரியான விடையினைத் தெரிக.**

> அந்த நாட்டில் தோற்றமும், பொலிவு
> முடையவர்களில் ஒருவன் பகீரன் எனி
> இனிமையான சுபாவமும் இரக்க சிந்தை

37) அந்த நாட்டில் உள்ளவர்களில் தோற்றமு
பகீரன்
1) சரி 2) பிழை 3) கூறமுடியாத


38) பகீரனைப் போன்றோர் அந்த நாட்டில்
1) சரி 2) பிழை 3) கூறமுடியாத

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

39) மேனாளனன் கீழ் உள்ளது போன்ற
நினைத்தான்




இவற்றை ஒரு திண்மத்திலிருந்து சம
வெட்டி அவன் செய்தான். மேனாளனன்
ளுள் மிகப்பொருத்தமானது எது?



40) நிருகன் விளையாடும் நேரத்தைக் குற
அக்கறை காட்டி வருகின்றான். இதன
1) வீண் விளையாட்டுக்களில் அதிக
படிப்பதில் கவனம் செலுத்துமாறு
கூறப்பட்டிருக்கலாம்.
2) பரீட்சைக்குரிய காலம் நெருங்கி
3) நிருகன் புத்தியில்லாத ஒரு பிள்ள

நும் ஆசிரியர்களும் பாராட்டினர். இதற்குக்
கூடிய பொருத்தமான கூற்று,
ல் அதிக புள்ளிகள் பெற்றிருக்கலாம்
காத செயலில் ஈடுபட்டிருக்கலாம்
ழ்ச்சி ஒன்றில் தோல்வி பெற்றிருக்கலாம்.
மூலம் காட்டப்படுவது வகுப்பறையில்
ரம் விருப்பமுள்ள பிள்ளைகளாவர்.
ாட்டப்படுவது சித்திரத்திற்கு மாத்திரம்
ளைகளாவர்.
ம் காட்டப்படுவது சங்கீதத்திற்கு மாத்திரம்
ளைகளாவர்.
டுள்ள வினாக்களுக்கு உரிய விடையை தரப்
தெரிந்து கீழ்கோடிடுக.




த்திற்கும் விருப்பமுடைய பிள்ளைகளின்
வு?
3) 15
விருப்பமுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை

3) 10
ங்களுக்கு விருப்பமுடைய பிள்ளைகளின்
வு?
3) 15

**டங்களில் உள்ள உருக்களுக்கு ஏதேனும் ளது அவ்வுருக்களின் பெறுமதியின் கூட்டுத் டுக்காகவும் தரப்பட்டுள்ளது. பெறுமதியின் இடங்களுக்கு உரிய விடையை தரப்பட்டுள்ள ந்து அதன்கீழ் கோடிடுக.**

7 1) △△ 2) △□ 3) ⊙⊙

2

0

1

1

1) 14,09 2) 11,09 3) 12,09

2


1

**த வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு த் தெரிக.**


மும், பொலிவும், வனப்பும் உடற்கட்டு
ன் பகீரன் எனினும் அவனைக் காட்டிலும்
இரக்க சிந்தையுமுடையவன் தனோஜன்

களில் தோற்றமும் பொலிவும் மட்டுமுள்ளவன்

3) கூறமுடியாது.
அந்த நாட்டில் வாழ்ந்தனர்.
3) கூறமுடியாது
**டுக.**
ளது போன்ற நாணயங்கள் செய்ய



லிருந்து சம அளவான துண்டுகளாக
மேனாளனன் பயன்படுத்திய திண்மங்க
ு எது?




நரத்தைக் குறைத்துப் படிப்பதில் கூடிய
ின்றான். இதன்படி தவறான கூற்று.
களில் அதிக நேரத்தைச் செலவிடாது
சலுத்துமாறு அவனுக்கு ஆலோசனை

ம் நெருங்கி வந்து கொண்டிருக்கலாம்.
ாத ஒரு பிள்ளையாக இருக்கலாம்.

பக்கம் 7

## வினாத்தாள் -II 1மணி 15 நிமிடங்கள்

**01) பின்வரும் பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அரசடி வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்
10.08.2004

செல்வன் ப.சேரலாதன்

பிறந்தநாள் அழைப்பிதழ்

எனது மகன் சுஜீவனின் 10 ஆவது பிறந்தநாள் விழா 24.08.2004 அன்று செவ்வாய்க்கிழமை பி.ப.5.00 மணிக்கு நடைபெறும். அவ்விழாவில் கலந்து சுஜீவனை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு
தங்கள் நல்வரவை நாடும்
ம.தர்மலிங்கம்.

01) அழைப்பிதழில் விடப்பட்ட பொருத்தமான குறியீடுகளை இடுக?
02) யாருடைய பிறந்த நாள் விழா நடைபெறுகின்றது?..........
03) விழா நடைபெறும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக?..........
04) இந்த அழைப்பிதழ் யாருக்கு எழுதப்பட்டுள்ளது?..........
05) இந்த அழைப்பிதழை அனுப்பியவர் யார்?..........
06) பி.ப. என்பதன் விரிவு என்ன?..........
07) இந்த அழைப்பை சாதாரண தபாலில் அனுப்ப வேண்டுமெனில் எவ்வளவு பெறுமதியான முத்திரை ஒட்டவேண்டும்..........
08) இந்த அழைப்பை பதிவுத் தபாலில் அனுப்பவேண்டுமெனின் எவ்வளவு பெறுதியான முத்திரை ஒட்டவேண்டும்?..........

**02) பின்வருவன சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**


01) மீன்கள் பூக்கள் மூலமாக சுவாசிக்கின்றன. ( )
02) வாயின் வெளிப்புறத்தில் உணவு படாதவாறு நாம் உணவை உட்கொள்ளுதல் வேண்டும். ( )
03) நாம் அயடீன் கலந்த உப்பைப் பயன்படுத்துவதால் கண்டமாலை நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும். ( )
04) சித்தார்த்தகுமாரன் பிறப்பை ஞாபகப்படுத்தக் கொண்டாடப்படும் பண்டிகை நத்தார் ஆகும் ( )
05) ஆடையில் தீப்பற்றிக்கொண்ட ஒருவர் அதிலிருந்து தன்னைப் பாதுகாக்க வேகமாக ஓடவேண்டும். ( )
06) நீர் தேங்கி நிற்கும் குழிகளை மண்ணால் நிரப்புதல் நுழம்பு பெருகுவதைத் தடுக்கும் ஒரு செயற்பாடாகும். ( )
07) நாற்றுமேடைகளை ஒழுங்குசெய்யும் போது நீர்வழிந்தோட வசதி செய்தல் வேண்டும். ( )
08) உயரமான கட்டடத்தின்-மேல், மாடிக்கு இலகுவாகச் செல்ல மின் உற்பத்தி பயன்படுத்தப்படுகின்றது. ( )

**03) சரியான விடையின் கீழ்க் கோடு இடுக.**

01) முஸ்லிம்கள் பின்பற்றும் சமயம் எது?
1) இந்து 2) கிறிஸ்தவம் 3) பௌத்தம் 4) இஸ்லாம்.
02) இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் இலை எது?
1) நாகமர இலை 2) அரச இலை 3) ஆல் இலை 4) மா இலை.

பக்கம் 8

03) பின்வருவனவற்றில் செடிவகையைச் சேர்ந்த தாவரம் எது?
1) றப்பர் 2) வாழை 3) புடோல் 4) கத்தரி
04) தேங்காய் மட்டைகளை ஒன்றாகச் சேர்த்து செய்யப்படும் பயிர்ச் செய்கை எது?




05) செழிப்பான நாற்றுக்கழின் வித்து ஒன்றின் இயல்பாகக் கருதக்கூடியது எது?
1) மேற்றோல் மேடுபள்ளங்களுடன் இருத்தல்
2) உள்ளீடு நிரம்பிக் கொண்டிருத்தல்
3) முதிர்ச்சி அடையாதிருத்தல் 4) பூச்சிகளினால் பாதிக்கப்பட்டிருத்தல்

**04) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பயன்படுத்தும் சரியான ஆங்கிலச் சொல்லை அடைப்புக்குறியினுள்இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) நாய்க்குட்டி (Paper, Puppy, Peppy)
2) எங்கே (Where, Wear, Were)
3) உனது (Our, Your, You)
4) நேற்று (Yesterday, Yestarday, Yesterdey)
5) இரவு (Knight, Night, Might)

**05) பின்வரும் பந்தியை வாசியுங்கள் சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

காட்டின் உண்மையான நிலை தெளிவாகத் தென்படுவது இவ்வாறாகும். காட்டின் எப்பக்கத்திலும் மிருகங்களுக்கு அருந்த ஒரு நீர்த்துளி கூட இருக்கவில்லை. மழை தொடங்கிய போது கைவிட்டு வந்த ஆற்றின் தூரம் பற்றிய நினைவு யானைகளிடம் மாத்திரமே இருந்தது. விடாயினால் தவித்த மான் கூட்டம் அங்கும் இங்கும் அலைந்து நாளுக்கு நாள் கடலில் வீசும் காற்றின் மணத்தை நுகர்ந்தவண்ணம் கடலை நோக்கிச் சென்றது.


01) விடாயினால் தவித்த என்பதன் கருத்தாவது
1) நீரைத் தேடிச் செல்லும 2) நீர் உள்ள 3) குடிப்பதற்கு நீர் தேவை
02) மேலுள்ள விவரத்தில் உள்ள இணைமொழியாவது
1) கைவிட்ட 2) அங்குமிங்கும் 3) நீர்த்துளி
03) மேலுள்ள விவரத்திலுள்ள முற்று வினையாவது
1) வந்த 2) தென்படுவது 3) அலைந்தது.
04) மேலுள்ள விவரத்தில் இரு தடவை குறிப்பிட்ட சொல் யாது?
1) கூட்டம் 2) பக்கத்தில் 3) நினைவு

**06) அரச இலச்சினையின் பகுதிகளைப் பெயரிடுக.**





1) ..........
2) ..........
3) ..........
3) ..........
5) ..........
6) ..........
7) ..........

**07) பின்வரும் பிரசினங்களுக்கான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்**




1) பின்வரும் உருவின் சுற்றளவு எவ்வளவு?..........

பக்கம் 9

02)  இவ்வுருவின் 1/2 பங்கு நிகழ்த்துவதற்கு இன்னும் நிழற்றக் கூடிய பகுதி எவ்வளவு?..........

03) மலை உச்சியில் இருக்கும் ஒருவனுக்கு தென்கிழக்குத் திசையில் ஒரு வீடும் வடமேற்குத் திசையில் ஒரு பாடசாலையும், தென்மேறகுத் திசையில் சிற்றுண்டிச்சாலையும் வடகிழக்குத் திசையில் ஆஸ்பத்திரியும் தென்படுகின்றன. எனவே, வீட்டில் இருக்கும் ஒருவனுக்கு வைத்தியசாலை எத்திசையில் தெரியும்?..........
04) சதுர வடிவான ஒரு காணிக்கு கம்பி அடிப்பதற்கு ஒரு பக்கத்திற்கு கொங்கிறீட் தூண்கள் 10 தேவைப்படும். அவ்வாறாயின் காணியின் நான்கு பக்கத்திற்கும் கம்பி அடிப்பதற்குத் தேவையான கொங்கிறீட் தூண்களின் எண்ணிக்கை எவ்வளவு?..........
05) ஒரு நோயாளிக்கு நாளொன்றுக்கு 45 மில்லிலீற்றர் மருந்து தேவை. அவ்வாறான 3 நோயாளிகளுக்கு 675 மில்லிலீற்றர் மருந்து எத்தனை நாள்களுக்குப் போதுமானது?..........
06) ஒரு பீப்பாயில் ஒரு தீந்தை வகை ஊற்றப்பட்டுள்ளது. பீப்பாய்கொள்ளும் தீந்தையின் அளவின் 1/3 பங்கு அளவான 75 லீற்றர் தீந்தையை ஊற்றினால் பீப்பாய் முழு அளவில் நிரம்பும். அவ்வாறாயின் பீப்பாயில் இப்போது இருக்கும் தீந்தையின் அளவு எவ்வளவு?
..........
07) ஒரு மனிதன் தனது சம்பளத்தில் 1/2 பங்கு உணவுக்கும், 1/4 பங்கு வீடு வாடகைக்கும் ஒதுக்கிவிட்டு மீதியை சேமிப்பான். அவன் சேமிப்புச் செய்த பணம் ரூபா.300 எனின் அவன் உணவுக்குச் செலவு செய்த பணம் எவ்வளவு? ..........

**08) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?**

இரவைப்பகலாய் ஆக்கி நீயும்
இன்பம் தருகிறாய் - உலகம்
ஏற்றத் தாழ்வு பாராமலே
ஒளியைத் தருகின்றாய்.

01) இப்பாடலில் எதனைப்பற்றிக் கூறப்படுகின்றது?..........
02) பாடலில் உள்ள முன்னிலைப் பெயர்ச் சொல் எது?..........
03) 'தருகிறாய்' என்பதனை இறந்த காலத்தில் எழுதுக..........

**★ ஒத்தகருத்துள்ள சொல் எழுதுக?**

04) இரவு.......... 05) இன்பம் ..........

**★ எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுக.**

06) ஒளியை.......... 07) நீ ..........

**★ ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

08) பகல்.......... 09) உலகம் ..........
10) நீ .......... 11) ஒளி ..........

**09) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்குமுரிய தமிழ்ச் சொல்லை முன்னாலுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(01) Milk .......... (02) Money ..........
(03) Free .......... (04) Four ..........
(05) Farmer .......... (06) Mothar ..........

பக்கம் 10

**10) நாதன் கடையில் வாங்கிய பொருட்களின் சிட்டைகளின் விவரம் கீழே உள்ளது. அவ்விவரத்தைக் கொண்டு அதன் கீழுள்ள வினக்களுக்கு விடை எழுதுக.**

| பொருள் | அளவு | விவரம் |
|---|---|---|
| மா | 3kg | 63.00 |
| அரிசி | 2½kg | 75.00 |
| சீனி | 750g | 22.50 |
| பருப்பு | 500g | 25.50 |

01) ஒரு கிலோக்கிராம் அரிசியின் விலையாது?..........
02) சீனி 1½ கிலோகிராமும், பருப்பு 750 கிராமும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?......
03) நாதன் மேலுள்ள அட்டவணையில் உள்ள பொருட்களை வாங்கிக் கொண்டு 200 ரூபாவைக் கொடுத்தால் மீதியாக எவ்வளவு கிடைக்கும். ..........ரூபா ..........சதம்.
04) 100g பருப்பின் விலையாது? ..........ரூபா ..........சதம்.
05) 2kg அரிசியும், 150kg சீனியும் 250kg பருப்பும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும். ..........ரூபா ..........சதம்.

**11) அடைப்புக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடங்களை நிரப்புக.**

தேசியப்பாடல், விரிவாகவும், ஏப்ரன், சோம் தையல், நெருக்கமாகவும், அருவிவெட்டுப்பாடல், சங்கிலித்தையல், கையுறை, கடதாசி.

01) .......... அணிந்த உணவு தயாரிப்பது நல்லது.
02) தேசிய கீதம் பாடும் போது குதிக்காலை .......... பாதத்தின் முன்பகுதியை சற்று அகற்றியும் V எழுத்து வடிவில் வைத்திருத்தல் வேண்டும்.
03) கிராமத்துப் பெண்கள் பாடும் பாடல் .......... ஆகும்.
04) பூவொன்றை அழகாக்க .......... மூலம் தைக்கலாம்.
05) வைத்தியர்கள் சத்திரசிகிச்சையின் போது .......... களைப் பயன்படுத்துவர்.

**12) நான் வீதியால் சென்ற போது ஒரு பணப் பொதியைக் கண்டெடுத்தேன்...... என்பதைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதி சம்பவத்தைப் பூர்த்திசெய்யுங்கள்.**

01)..........
02)..........
03)..........
04)..........
05)..........
06)..........

அரச பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று சித்தியடைய வாழ்த்துகின்றோம்.

தயாரிப்பு:
ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன்.

"ரோயல்" இண்டஸ்றீஸின்
சிறந்த தயாரிப்பு
சுத்தமான றோயல் ஒலிவ் ஒயில்
வாங்கிவிட்டீர்களா?
★ உங்கள் சருமத்தை மினு மினுப்பாக்கி மேனியைக் கவர்ச்சியுடையதாக மாற்றுகின்றது.
தோலில் வரும் வியாதிகளுக்கு சிறந்த ஒளஷதம்
PRODUCT OF SPAIN
ROYAL 100% சுத்தமான ஒலிவ் ஒயில் OLIVE OIL
PACKED BY : ROYAL Industries Colombo - 12
☎ : 0112334603
(35308)




சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567



## STUDY IN INDIA

**Engineering, Medicine & Pharamedical**
**ADMISSIONS 2004 - 05**
**VINAYAKA MISSIONS'GROUP OF COLLEGES**
www.vinayakamissions.com

Vinayaka Missions is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

**A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V. I. T)**
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

**B.Eng** - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)

Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

**V.M College of Pharmacy, Salem, TAMIL NADU**
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

**B.Pharm** - Bachelor of Pharmacy - 4 Years


Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
* Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

*Contact for more details:-*
**NN EDUCONSULT**
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011 - 555 88 33 Fax: 011 - 555 88 44
E-mail: nnconsult@sltnet.lk


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 07 - 1938



மறைவு 11 - 08 - 2001

அமரர் **பொன்.சங்கரப்பிள்ளை** (J.P.)
(முன்னாள் அதிபர், யா/உடுத்துறை ம.வி.)

என் வாழ்க்கை சிறப்படைய
எத்தனை பாடய்யா தினம் பட்டாய்!
ஊரார் புகழ்ந்து பேச வாழ்ந்த உத்தமரே!
எமையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்?

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

புலோலி தெற்கு,
புலோலி. (35087)(21-19-15)

மகள், மருமகன், பேரன்.

## மாவைக் கந்தன் ஆலயத்தில் அன்னதானம்

யாழ்ப்பாணம்,ஒக.11

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர் வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் ஆலய வடக்கு வீதி யிலுள்ள மடத்தில் அடியவர்களுக்கு அன்ன தானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக மாவைக கந்தன் அன்னதான சபைத் தலைவர் பொ.சற்குண நாதன் தெரிவித்துள்ளார். (8-13)

## நெடுந்தீவில் தொழிற்பயிற்சி நிலையம்

நெடுந்தீவு, ஒக.11

நெடுந்தீவுப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்குத தொழில் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு அப் பிரதேச பங்குத்தந்தை அருட்திரு. எஸ். செபநேச ரட்ணம் அடிகளாரின் ஏற்பாட்டின்கீழ் நெடுந்தீவு மத்திய பகுதியில் தொழில்பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழில்பயிற்சி நிலையத்தினை நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல் லூரி அதிபர் அருட்செல்வி சூசைப்பிள்ளை இக்னேசியா அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார். (8-112)

## ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கிக்கட்டடப் பணிகள் பூர்த்தி

ஊர்காவற்றுறை,ஒக.11

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு அருகில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவந்த சமுர்த்தி வங்கியின் கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதனையடுத்துப் புதியவங்கிக் கட்டடத்தின திறப்புவிழா விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஊர்காவற்றுறைப் பிரதேச சமுர்த்தி வங்கி நாரந்தனையில் உள்ள தனியார் வீடு ஒன்றில் தற்காலிகமாக செயற்பட்டு வருகிறது. அண்மையில் மேற்படி சமுர்த்தி வங்கி உடைக கப்பட்டுப் பல பெறுமதியான பொருள்கள் கள வாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-16)

## சாரதிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக.11

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் யாழ். மத்தியகல்லூரியில் நடத் தப்படும் வாகனச் சாரதிப் பயிற்சி பெறுவோர் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ. மத்திய கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.(ஒ-9)

## எழுவைதீவு வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் புனரமைப்பு

ஊர்காவற்றுறை,ஒக.11

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய ஆரம்பப் பிரிவு வகுப்பறைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப வைபவம் இன்று புதன் கிழமை காலை 11 மணிக்கு ஆசிரியர் சோ.முகுந தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தீவகக கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு) செ.சிவபாதமும் சிறப்பு விருந் தினராக தீவகக்கல்வி வலய ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வி.தனிநாயக மும் கலந்துகொள்வார்கள். (8-16)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி. சாவகச்சேரியில் பழைய பொலீஸ் ஸ்ரேசனுக்கு முன்னால் ஒரு பரப்புக் காணி மேல் வீட்டுடன் (பூரண பவனம்) விற்பனைக்குண்டு. 25 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **செ.தில்லைநாதன்**
இளைப்பாறிய அதிபர்,
புளியடி வைரவர் கோயிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
(24-21-19) T.P.: - 0712 524550 (35109)

## கோயில் வாகனம் விற்பனைக்கு

புத்தம்புதிய வர்ணப் பூச்சுடன் கூடிய அழகு வேலைப்பாடுடைய மயில் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: செ.சுப்பிரமணியம்
ராஜ்மணி பந்தல் சேவை
(24-19-15) குறுக்கு றோட், நீர்வேலி. (35114)

## விற்பனைக்கு

பலவித அளவுகளிலான உடைத்தெடுத்த கொங்கிறீற் கற்கள், கற்தூள்கள், காட்டுக்கற்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**228, இருபாலை வீதி (ஸ்ரேசன் வீதி),**
**சிவபூமி பாடசாலையடி, கோண்டாவில்.**
(35070)(21-19-15)

## நெஞ்சகலா நினைவஞ்சலிகள்

பதினேழாம் ஆண்டு முதலாம் ஆண்டு



அமரர் திருமதி
**அப்பாபிள்ளை ஏகாம்பரம் ஏகாம்பரம் ஞானம்மா**
22-10-1987 மறைவு 24-07-2003

நேசத்தால் எமை வளர்த்து நேர்வழியில் வாழவைத்து
ஆசைக் கனவுகளை அவனியில் நிறைவேற்றிய
பாசம்மிகு அன்புத் தெய்வங்களை பாரினில் நாம் வாழும் வரை
எம் இதயத்துள் இருத்தி எந்நாளும் பூசிப்போம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சிவபுரம்"
நீதிமன்ற வீதி, கொடிகாமம்.

- அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(35090)(34-21-19-15)

## பணிநிலை வெற்றிடம்
## SECOTE PRIVATE LIMITED

எமது நிறுவனம் கட்டடங்கள், வீதி நிர்மாணம், மின்சார வேலைத் திட்டங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல்சார் முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பின்வரும் பணிநிலை களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

1. **பொறியியலாளர்:** (2 Nos)
   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத் தல் (B.Sc.Eng) கட்டடம், வீதி நிர்மாணம் தொடர்பான முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
2. **நிர்வாக அலுவலர்:** (1 Nos)
   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் (BBA/B.Com), 2வருட அனுபவம்.
   அல்லது
   HNDA or AAT or NCAT or அதற்கு சமமான சான்றிதழுடன் 5 வருட அனுபவம்
   அல்லது
   நிர்வாக முகாமைத்துவத்தில் 10 வருட அனுபவம் உள்ளவர்கள்
3. **தொழில்நுட்ப உத்தியோகத்தர்:** (4 Nos)
   உயர் தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் (NDT Or NCT குடிசார்) இருத்தல் வேண்டும்.
4. **மேற்பார்வையாளர்:** (4 Nos)
   உயர் தொழில்நுட்பக் கல்லூரிச்சான்றிதழ் (NCT or BCT) இருத்தல்
   அல்லது
   குடிசார் பொறியியலில் அனுபவம் உள்ளவர்கள்.
5. **கொள்வனவு உத்தியோகத்தர்:** (1 Nos)
   க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
6. **களஞ்சியக் காப்பாளர்:** (1Nos)
   க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஓரளவு ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது. முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
7. **சாரதி:** (2 Nos)
   சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

**கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வேலை செய்யக கூடியவர்கள் மட்டும்** கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும் நேர் முகப்பரீட்சைக்கு சுயவிபரக்கோவையுடன் நேரடியாக சமுகம் தரவும். நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடமும் நேரமும்.

| முகவரி | நேரம் |
|---|---|
| **SECOTE INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.** 325/1,Palaly Road, (Parameswara Junction), Thirunelvely, Jaffna. | Thursday 4.30pm-6.00pm<br>Friday 4.00pm-6.00pm |
| **SECOTE (PVT) LTD.** 74, Ratnapuram, Kilinochchi. | Saturday 2.00pm-4.00pm |

E-mail:secoteinfo@yahoo.com
(35093)(42-21-19-15)


Dialog GSM
kit
எந்நேரமும் உன்னுடன்..
டயலொக்
கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

WESTERN UNION MONEY TRANSFER
வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றல்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட எம்மை நாடுங்கள்!



பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

ஸ்ரீ முருகன் SRI MURUGAN 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk Fax: 222 3435

# யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டால் விடுதலை விரைவுபடுத்தப்படும்

## யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்



எங்கள் மீது யுத்தம் தொடுக்கப்பட்டால் விடுதலையை விரைவுபடுத்த வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வே.சிற்சபேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செம்மணன் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியத்தின் முதற்கட்டமைப்பாக தேசிய எழுச்சிப் பேரவை செயற்படும். தலைவருடைய வேண்டுகோளுக்கமைய அதற்கு யாப்பு ஒன்று அமைக்கப்பட்டு அவரது கண்காணிப்பின்கீழ் செயற்படுத்தப்படுகின்றது. தேசிய எழுச்சிப் பேரவை சரியான கட்டமைப்பாக உருவாக்கப்பட்டு ஒரு கிராமத்தின் வழிகாட்டி அமைப்பாக செயற்படும்.

முழுமையான விடுதலையின் பின்பே முழுமையான அபிவிருத்தியைக் கொண்டுவரமுடியும். இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி சரியான தேவையான இடங்களுக்குச் செல்லும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

18 ஆயிரம் வீரர்களின் கனவுகள் நிறைவேற்றப்படும்வரை யாருமே சோர்ந்துவிடக் கூடாது. சாவின் விளிம்பில் இருந்து விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாத்த பங்கு உங்களுக்கு உண்டு.

21 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இனக் கலவரத்துக்குத் தற்போது மன்னிப்புக் கேட்பது உலகத்திற்கு பாசாங்கு காட்டுவதற்கே. எமது இனத்திற்கான உரிமைகளைத் தருவதற்கு யாருமே தயாரில்லை. எத்தனை ஆயிரம் உயிர இழந்தும் விலை மதிக்க முடியாத சொத்துக்களை இழந்துமே அவர்களுடன் பேசுகின்றோம்

எங்கள் மீது யுத்தத்தைத் தொடுத்தால் விடுதலையை விரைவுபடுத்த வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் உள்ளது. பலம்மிக்க அமைப்பாக நாம் உள்ளோம். இந்த சமாதானச் சூழலைச சரியான முறையில் பயன்படுத்த அரசு மறுக்குமேயானால் - எங்கள்மீது யுத்தம் திணிக்கப்பட்டால் - அதனை எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம். நாம் பலமாக இருந்தால் இந்த மண்ணில் யுத்தம்வராது. சமாதானம் எங்களை இறுககிப் பிடிக்கும். எமது பலம்தான் இதனைத் தீர்மானிக்கும் - என்றார். (ப-8-73)

# சட்டங்கள் பற்றிய அறிவு கிராம அலுவலருக்கு அவசியம்

## மனித உரிமை நிலைய அதிகாரி தெரிவிப்பு

வலி.மேற்கு,ஓக.11

நீதி, நிர்வாகக் கட்டமைப்பில் யாழ். மாவட்டத்தில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இவற்றை நீக்குவதற்கு கிராம அலுவலர்களுக்கு சட்டம் தொடர்பான பயிற்சிநெறி அவசியமாகும்.

- இவ்வாறு குறிப்பிட்டார் மனித உரிமைகள் நிலையத்தின் சட்ட அதிகாரி எஸ்.நிரஞ்சன்.

யாழ். மாவட்டத் தகவல் மையத்தில் கிராம அலுவலர்களுக்கு சட்டம் சார்ந்த இரண்டு நாள பயிற்சிநெறியினை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்ட அதிகாரி எஸ்.நிரஞ்சன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

கிராம அலுவலர்கள் யாழ். மாவட்டத்தில் நீதி, நிர்வாக நடவடிக்கைகளில் காணப்படும் பாரிய இடைவெளியை நீக்குவதற்கு முன்வர வேண்டியது அவசியம். கிராம அலுவலர்கள் மக்களின் சகல தரப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு அரசினரால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் ஆவர். மக்களுக்கு ஏற்படுகின்ற பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணவேண்டிய பொறுப்பும் கிராம அலுவலர்களைச் சார்ந்தது. இந்நிலையில் சட்டத்தைப் பற்றி கிராம அலுவலர்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதுடன் மக்கள் நீதிமன்றத்துக்குச் சென்று செலவழிக்கும் பணத்தையும் காலத்தையும் மீதப்படுத்த முடியும்.

யாழ். குடாநாட்டில் இன்று கிராம அலுவலர்களே சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டவேண்டியவர்களாக இருக்கின்றனர். கிராமப் புறங்களில் சட்டம் சீர்குலையாமல் பாதுகாக்கவேண்டிய பாரிய பொறுப்பும் கிராம அலுவலர்களையே சார்ந்தது.

இதனால், கிராம அலுவலர்களுக்குச் சட்டத்துறையில் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

இப்பயிற்சி நெறியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 40 கிராம அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

சட்டம் சார்ந்த பயிற்சியும் சிறுபான்மையினரின் உரிமைகளும் என்ற தலைப்பில் இரண்டு நாள்கள் இந்தப் பயிற்சிநெறி நடைபெற்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முதுநிலை விசாரணை அதிகாரி எஸ்.பெறோஸ், சமாதான மனித உரிமை பண்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் வண.பிதா பேணாட், ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் முதுநிலை பாதுகாப்பு எழுதுநர் எஸ்.மதிரூபன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் செல்வி நாகராசா ஜெயந்தி ஆகியோரும் பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றினார்கள்.

இரண்டு நாள் பயிற்சிநெறியின் இறுதிநாள் நிகழ்வினை மனித உரிமைகள் நிலையத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி நீல்.டி.சில்வா சான்றிதழ்களை கிராம அலுவலர்களுக்கு வழங்கி நிறைவு செய்துவைத்தார். (ப-8-175)

# தனியார் வைத்திய நிலையங்கள் இலாப நோக்கற்றுச் செயற்பட வேண்டும்

## சங்கானைப் பிரதேச செயலர் சொல்கிறார்

"இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாமல் மக்களுக்குச் சேவைசெய்யத் தனியார் வைத்திய நிலையங்கள் முன்வரவேண்டும். சங்கானை வைத்திய நிலையம் இதற்கு முன்னோடியாகத் திகழும் என்று நான் நம்புகின்றேன்" இவ்வாறு சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

சங்கானை நிகரவைரவர் ஆலயத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட சங்கானைத் தனியார் வைத்திய நிலையத்தை அண்மையில் மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்த போதே பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார். பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான நா.கோபாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சங்கானைப் பகுதியில் பெரும்தொகையான மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் தமது வைத்தியத் தேவைக்கு யாழ்ப்பாணத்துக்குச் செல்லவேண்டியுள்ளது. இன்று ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை முழுமையான சேவையை மேற்கொள்ளும் பட்சத்தில் இப்பகுதி மக்களின் நேரம், பணம் பெருமளவில் சேமிக்கப்படும். தனியார் வைத்திய நிலையங்கள் இலாபத்தை அதிகளவு எதிர்பாராமல் மக்களுக்குச் சேவை செய்யவேண்டியது அவசியம் ஆகும் என்றார். சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினார்கள். (ப-175)




# மாணவர்களின் ஆற்றலுக்கு முன்பள்ளி அத்திபாரமாகும்

மாணவர்களிடையே நல்ல நாவன்மையும், ஆற்றலும் மிளிர வேண்டுமாகவிருந்தால் முன்பள்ளியெனும் அத்திபாரம் மிகவும் இன்றியமையாததாகவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். கல்விவலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி யோகராசா யோகேஸ்வரி.

அச்சுவேலி, தோப்பு கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்றைய இளம் சிறார்களாக உள்ள இவர்கள் நாளைய சமுதாயத்திற்கு நற்றொளி வீசும் தீபங்களாக மிளிரவேண்டுமாகவிருந்தால் இவர்களுடைய முன்பள்ளியெனும் அத்திபாரக் கல்வி அவசியமானதொன்றாகும். இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் நாம் முன்பள்ளி ஆசிரியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு திறமையான பயிற்சிகளை மேற்கொள்கின்றோம். அவ்வாறான பயிற்சிகளில் ஆசிரியர்கள் தமது சிரமங்களைக் கருத்தில்கொள்ளாது கலந்துகொண்டு தமக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நல்லதோர் ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் - என்றார்.

அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே.பாலசுப்பிரமணியம், அச்சுவேலி அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஜெகன், அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர், அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர் வ.திருஞானசம்பந்தர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

விளையாட்டு விழாவில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ப-8-13)

# வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை தட்டிக்கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டு

## வைத்திய கலாநிதி தியாகராசா தெரிவிப்பு

வலி.வடக்கு,ஓக.11

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் எம மீது கொண்ட அன்பு அனுதாபம் காரணமாக இங்கு வந்துள்ளார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அவர்கள் எந்த நாட்டில் இருந்து வந்தார்களோ அந்தந்த நாட்டின் நோக்கங்களை நிறைவேற்றுபவர்களாகவே செயற்படுகின்றார்கள். இவர்களது செயற்பாடுகளைத் தட்டிக் கேட்கும் உரிமை எமது மக்களுக்கு உள்ளது.

மேற்கண்டவாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் தலைவரும், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் யாழ். மாவட்ட இணைப்பாளருமான வைத்திய கலாநிதி க.தியாகராசா குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் நடுவப் பணியகத்திறப்பு விழா க.கனகலிங்கம் தலைமையில் மனோகரா சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வைத்தியகலாநிதி க.தியாகராசா மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள் பொதுமக்களுடைய தேவைகள், உணர்வுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். வெறுமனே தமது எண்ணத்தின்படி செயற்படுவதையும் விநியோகங்களை மேற்கொள்வதையும் நாம் அங்கீகரிக்க முடியாது. மக்களுக்கு இதனைத் தட்டிக்கேட்கும் உரிமையும் இருக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் தமது நாட்டின் வாழ்க்கை முறைக்கு ஏற்பவே இங்கும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். எம்மக்களின் சேவைக்கென வழங்கப்படும் பணத்தில் 70 வீதமான பணம் இவர்களினுடைய செலவுகளுக்கே பயன்படுத்தப்படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நிதியை நாமே பெற்று எமது மக்களின் தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கு எமது மக்களினுடைய தேவைகள், விருப்பங்கள் என்னவென்பதை உணரமாட்டார்கள்.

மக்களினுடைய தேவைகளை உரிய முறையில் பூர்த்திசெய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வராவிட்டால் அத்தகைய அமைப்புக்களை இம்மண்ணில் இருந்து வெளியேற்ற வேண்டும். இதற்கான உரிமை இம்மண்ணில் உள்ள மக்களுக்கு முழுமையாக உள்ளது என்றார். (ப-8-86)

# கற்பித்தல் முறைக்கேற்ப ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்

## கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கருத்து

வலி.தெற்கு,ஓக.11

"மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதில் இன்று செயற்பாட்டு ரீதியிலான கற்பித்தல் முறைக்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. எனவே, ஆசிரியர்கள் செயற்பாட்டு முறையிலான கற்பித்தலுக்கு ஏற்றமுறையில் தம்மைத் தயார்ப படுத்திக் கொள்ளவேண்டும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் கே.என்.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் கலாநிதி கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவர் தமது உரையில் -

எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆசிரியர்கள் தமது பணியை மேற்கொள்ள வேண்டும். தமது கடமைப் பொறுப்புக்களை ஒவ்வொரு ஆசிரியர்களும் உணர்ந்துகொண்டு செயற்படவேண்டும்.

ஆசிரியர்களுக்கு அரச திணைக்களங்களாலும் தனியார்களாலும் பல்வேறு அழுத்தங்கள் ஏற்படலாம். அவற்றையெல்லாம் எதிர்கொண்டு தமது பணியினை செவ்வனே ஆற்றவேண்டும்.

இன்று உலகத்தில் கல்வித்துறையில் பல மாற்றங்கள், புதுமைகள், புதிய கண்டுபிடிப்புக்கள் எல்லாம் இடம்பெற்று வருகின்றன. உலகம் அறிவியல் சார்ந்த உலகாக விரைவான மாற்றம் பெற்றுவருகின்றது.

இவற்றையெல்லாம் ஆசிரியர்கள் புரிந்துகொண்டு புதிய கருத்துக்களை உள்வாங்கி அவற்றை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்று கூறினார்.

கலாநிதி நா.அமிர்தலிங்கம், விரிவுரையாளர் கு.சண்முகநாதன், விரிவுரையாளர் திருமதி வ.சண்முகநாதன், செல்வி யோ.கந்தையா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரததினம் உட்பட வேறு பலரும் உரையாற்றினர். (ப-152)

# மேலும் சில பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மேலும் சில பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் அதிபர்கள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை வருமாறு:-

**கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

லோ.கோஸ்ரன், சி.சுரேஷ்குமார், கா.கஸ்தூரி, (வர்த்தகம்)-தலா 2ஏபி, ப.சத்தியரூபன் (விஞ்ஞானம்)-2பிசி, சி.தவக்குமார் (வர்த்தகம்)-ஏ2பி, 2ஏசி - ஒருவர், 3பி - ஒருவர், ஏ2பி - ஒருவர்.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

சங்கீதா கந்தசாமி (வர்த்தகம்) - 2ஏபி, மேரி டயானா மரியநாயகம் (வர்த்தகம்) - 2ஏபி, ஏபிசி - ஒருவர், 2பிசி - ஒருவர், ஏ2பி - ஒருவர்.

**ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்**

கீ.மேரி ஜோசப்பின் சாந்தா (கலை)-ஏபிசி.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்**

த.சுரேசன், அ.அருள்கலா (வர்த்தகம்) - தலா ஏ2பி, ம.உதயா, ஸ்ரீ.அனுஷியா (கலை) - தலா ஏ2பி, 2ஏசி - இருவர்.

**வைத்திலிங்கம் து.ம.ம.வித்தியாலயம்**

க.பிரியா (வர்த்தகம்)-ஏ2பி, ஏபிசி-ஒருவர்.

**கரம்பன் சிறியபுஷ்பம்**

தெ.தாட்சாயினி (கலை) - ஏபிசி.

**யாழ்ரன் கல்லூரி**

பி.பிரவீனா (வர்த்தகம்) ஏ2சி.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

எஸ்.கோபிகா, என்.செந்தூரன் (கணிதம்) - தலா ஏ2சி, என்.தவச்செல்வம் (வர்த்தகம்)-2ஏபி, தி.திருமாலினி, த.மேனகா (வர்த்தகம்)- தலா 3பி, ஏ2பி - ஒருவர், 2பிசி - ஒருவர் ஏபிசி - நால்வர்.

**மீசாலை வீரசிங்கம் ம.வி**

2ஏபி - ஒருவர், 2ஏசி - ஒருவர், ஏபிசி - நால்வர், 3பி - இருவர்

**நாவற்குழி ம.வி.**

2ஏசி - ஒருவர்.

**கைதடி முத்துக்குமாரசாமி**

பி2சி - ஒருவீர்.

**உசன் இராமநாதன்**

2ஏபி - ஒருவர், 3பி - ஒருவர்

**திருக்குடும்பக் கன்னியர்மடம்**

அமலதாசன் யூட் மறினி, கிளவோர் டசிஸ் டெல்சியா, றெபோட் அன்ரன் கறீன்சுலக்சி, அன்ரனிதாஸ் செறின்நயனி (வர்த்தகம்)-தலா ஏ2பி, பி2சி - ஒருவர், 2ஏசி - ஒருவர். (ஜ-72-117)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அளவெட்டி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல் இடம்பெறவுள்ளதாக அளவெட்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆர்.முருகநாதன் அறிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப்படவுள்ள திகதிகளும் இடங்களும் வருமாறு:

இன்று காலை 9.00 மணி - கலைவாணி ச.ச.நிலையம் அளவெட்டி வடக்கு, மு.ப. 11.15 மணி - அறிவொளி ச.ச நிலையம், அளவெட்டி வடக்கு, பி.ப ஒரு மணி பத்தானை பாரதிதாசன் ச.சநிலையம் அளவெட்டி வடக்கு.

நாளை காலை 9.00 மணி முற்போக்கு வாலிப ச.ச.நிலையம் அளவெட்டி மேற்கு, மு.ப. 11.15 மணி முருகபுரம், சிறிரங்கன் ச.ச நிலையம் அளவெட்டி மேற்கு, பி.ப. ஒரு மணி - தேவன ஸ்ரோர்ஸ் பத்துப்பனையடி, அளவெட்டி மேற்கு, பி.ப. 2.30 - மணி கலைமகள் ச.ச. நிலையம் காட்டுப்புலம், அளவெட்டிமேற்கு. (10-76)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

அஜந்தன் - கிரன் தம்பதிகளின் செல்வப் புதல்வி இஷிகா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (11.08.2004) புதன்கிழமை லண்டனில் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, கதிரிப்பாய், அச்சுவேலியில் உள்ள தாத்தா, அப்பம்மா, மாமா, மாமி, நிரு மச்சாள், பிரவின் அத்தான் மற்றும் உற்றார், உறவினர்கள் செல்வச்சந்நிதி முருகனின் துணையுடன் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

கதிரிப்பாய், அச்சுவேலி. அருணகிரி (தாத்தா)



(35116)


## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.11

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக வலி.வடக்கு உதவிப் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (8-150-201)

## ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம்

வலிமேற்கு,ஓக.11

வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழன் காலை 9.30 மணிக்கும் விவசாயக்குழுக் கூட்டம் 11.30 மணிககும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலா சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஜ-175)

## உழவு இயந்திரங்கள் தடுத்துவைப்பு

ஊர்காவற்றுறை,ஓக.11

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த மூன்று உழவு இயந்திரங்கள் ஊர்காவற்றுறைப் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டு தற்பொழுது பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பகுதிகளில் கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணல் சாட்டி மற்றும் மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்தே அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகிறது.

இப் பகுதியில் வேலணைப் பிரதேச செயலரின் அனுமதிப பத்திரமின்றி மணல் அகழ்தல் தடை செயயப்பட்டுள்ளது.

இதனால் களவாக ஏற்றி வரப்படும் மணல குறைந்த விலையில் விற்கப்படுகிறது. (8-16)

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

**கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

அலுவலக நேரம்:
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8 மணி தொடக்கம் 5 மணி (விடுமுறை நாள்கள் தவிர)

| | |
|---|---|
| 01. தவேந்திரன் மரியா ஜூ சிஸ்டா | பிரான்பற்று, நிச்சாமம், சங்கானை. |
| 02. கந்தையா திருச்செல்வம் | மே/பா. ந.குமரகுருநாதன், - பிள்ளையார் கோயிலயடி, மூளாய். |
| 03. திருக்கேதீஸ்வரன் கிருபாராணி | செட்டியார் மடம், அராலி வடக்கு. |
| 04. பேரழகன் சரோஜினிதேவி | சுருப்பட்டிப் பிள்ளையார் கோயிலடி, - அராலி தெற்கு. |
| 05. குலசேகரம்பிள்ளை ராசமலர் | பறாளை வீதி, சுழிபுரம். |
| 06. ஜெயக்குமார் செல்வலட்சுமி | செல்வகிருஷ்ணன் வீதி, சுழிபுரம் மத்தி. |
| 07. சாந்தலிங்கம் மேரி | மே/பா. சின்னத்தம்பி. நாவற்குழி சந்தி. |
| 08. முருகேசு நாகராசா | பண்டிதர் குடியிருப்பு, கெற்பலி, மிருசுவில். |
| 09. சிவானந்தன் சகுந்தலாதேவி | கல்வயல், சாவகச்சேரி. |
| 10. நாகமணிப்பிள்ளை பிரின்ஸ் நவநேசன் | தட்டார் ஒழுங்கை, மட்டுவில் வடக்கு. |
| 11. சூசைதாசன் லீலாவதி | மே/பா. சாம் ராசையா, உசன், மிருசுவில். |
| 12. பாலராசா இவோனி | மே/பா. லிகோரியார் கோயில், சாவகச்சேரி. |
| 13. ஞானபண்டிதர் (தங்கராசா) மகேஸ்வரி | கச்சாய், சாவகச்சேரி. |
| 14. மாரிமுத்து கதிரவேலு | மோகனதாஸ் பாடசாலை அருகில், - மட்டுவில் தெற்கு. |
| 15. ரத்தினம் அன்னபூரணம் | ஞானவைரவர் கோயிலடி, நுணாவில். |
| 16. சண்முகம் நித்தியானந்தம் | மறவன்புலோ. |
| 17. ஜெயசிங்கம் மரியநாயகி | கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை. |
| 18. சாந்தமேரி ஜேசுதாசன் | புனித மரியாள் இடம்பெயர்ந்தோர் முகாம், - சுருவில். |
| 19. தம்பிராசா சரஸ்வதி | 4ஆம் வட்டாரம், புங்குடுதீவு. |
| 20. தர்மலிங்கம் சரஸ்வதியம்மா | அம்மன் கோயிலடி, மண்டைதீவு. |
| 21. குணரத்தினம் கலைவாணி | வாரிவளவு, காரைநகர். |
| 22. செல்வராசா சிவபாக்கியம் | அம்மன் கோயிலடி, மயிலிட்டி வடக்கு. |
| 23. துரைராஜலிங்கம் சந்திரலீலா | மே/பா. தங்கராசா, புகையிரத வீதி, மல்லாகம். |
| 24. ரட்ணானந்தன் பவளக்கொடி | துர்க்கை அம்மன் கோயில், தெல்லிப்பழை. |
| 25. முருகவேள் நிலுக்சி | 7ஆம் கட்டை, காங்கேசன்துறை வீதி, - மல்லாகம். |
| 26. மகேசன் | நீதிமன்ற வீதி, மல்லாகம். |
| 27. மாணிக்கம் விக்டோரியா | செபஸ்தியார் கோயிலடி, கோண்டாவில் வடக்கு. |
| 28. நடராசா சிவஞானம் | கோண்டாவில் கிழக்கு. |
| 29. விக்னேஸ்வரன் ராகினி | 90, அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி கிழக்கு. |
| 30. ஸ்ரீகணேசமூர்த்தி ஜெயந்தி | மே/பா. திருமதி ப.நடராசா, மணியங்காடு, - கொக்குவில் மேற்கு. |
| 31. ஆர்.காளிராசன் | சாந்தி அரிசி ஆலை, கோண்டாவில் கிழக்கு. |
| 32. சித்திரவேல் பூமணி | இளையதம்பி வீதி, கண்டி வீதி, அரியாலை. |
| 33. செல்வரத்தினம் சொபாக்கியலட்சுமி | 50/35, செட்டித் தெரு, நல்லூர். |
| 34. தியாகு அகத்தம்மா | 08, பிள்ளையார் கோயிலடி, அரியாலை. |
| 35. பசுபதி மகேஸ்வரி | 33 செல்லர் ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர். |
| 36. அழகேஸ்வரன் மொறின் கிறிஸ்டினா | நேதாஜி ஒழுங்கை, நல்லூர். |
| 37. குலசேகரம் பாலகிருஷ்ணன் | 33, கைலாய பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர். |
| 38. குணபாலசிங்கம் கமலராணி | வன்னியசிங்கம் வீதி, இருபாலை வீதி, - கோண்டாவில் கிழக்கு. |
| 39. ஜோசப் ஃபிரீடா | 41/3, செம்மணி வீதி, நல்லூர். |
| 40. ராஜ்குமார் ராஜேஸ்வரி | 387/1, நாவலர் வீதி, நல்லூர். |
| 41. ஐயாத்துரை சுபாசினி | நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடி, - கோண்டாவில் மேற்கு. |
| 42. அம்பலம் ஆனந்தராசா | பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை. |
| 43. சுரேஸ்குமார் சிவமாலினி | விளையாட்டுத்திடல் வீதி, கல்வியங்காடு. |

குறிப்பு:-
மேலும் பெயர் விவரங்கள் 12/13/14.08.2004, ஆகிய திகதிகளில் 'உதயன்' பத்திரிகையில் வெளிவரும். (சி-36539)


அறுபதாவது ஆண்டு நிறைவு வாழ்த்து

திருமண நன்னாள் 11-08-2004

கேரதீவு வீதி, நாவற்குழியை வதிவிடமாகக் கொண்ட பாசமலர்கள் திரு திருமதி பொன்னம்பலம் அன்னம்மா தம்பதிகள்



தமது 60ஆவது ஆண்டு திருமண நிறைவு நன்னாளை இன்று (11-08-2004) புதன்கிழமை அவர்களது "இல்லத்தில் மகிழ்ச்சியுடன் வெகு விமரிசையாகக்" கொண்டாடுகின்றனர்.

அறுபது ஆண்டு கல்யாண நிறைவு காணும் இந்நன்னாளிலே
நீவிர் மன மகிழ்வுடனே இன்புற்றிடுவீர்!
அன்றில் பறவை என இணைந்தே
வாழ்க்கை மணம் கமழ வாழ்ந்த நல்வாழ்வு
வேருடன் விளங்கும் விருட்சமாய் வளர்ந்து
இன்னமும் செழித்து மேலோங்கிச் சிறந்திட
சகோதரன் நான் என் மனைவி, மக்கள், மருமக்களுடன்
உவகையுடன் உளமார வாழ்த்துகின்றோம்
எமது இனிய அத்தான் - அக்காவை வளமுடன்
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்

புதுவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

-சரவணமுத்து - தேவராஜா தம்பதிகளும் பிள்ளைகளும்.



## உடனடி வேலைவாய்ப்பு

**யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்க் கண்ட பதவிகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுடையோர் நாளை (2004.08.12) வியாழக்கிழமை காலை 10மணிக்கு நேரில் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.**

1) பொதிசெய்பவர்கள் (பெண்கள்)
2) துப்புரவு செய்பவர்கள் (பெண்கள்)
3) சிற்றுண்டி தயாரிப்பவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) (பலகார வகைகள்)
4) சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) (45வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்)

**அன்னை நாகா புட் சிற்றி**
**No.175, K.K.S. ROAD.**
**யாழ்ப்பாணம்.**

(சி.36541) (21-18)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**பொன்னம்பலம் அம்பிகை**

அன்னை மடியில் 04-08-1924 — இறைவன் மடியில் 12-07-2004

எமது அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு மறையாது. ஆத்மா சாந்தியடைவதாக.

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவின் மீளாத்துயரில் கலந்துகொண்டு பங்கெடுத்து எமக்குப் பல்வேறு வகையிலும் உதவிகளும் ஒத்துழைப்பும் வழங்கி ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்தோருக்கும் வரமுடியாத பட்சத்தில் தொலைபேசி, தந்தி, தொலைநகல் மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (11-08-2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'தேவிவாசம்'
ஏழாலை மேற்கு, சுன்னாகம். (35123)

- குடும்பத்தினர்.

## சட்ட விரோதமான முறையில்
# இத்தாலிக்குள் நுழைய முயன்ற 25 ஆபிரிக்கர்கள் படகில் மரணம்

யலிர்மோ,ஓக.11

பாதுகாப்பற்ற மரப்படகொன்றில் சட்டவிரோதமாக இத்தாலிக்குள் குடியேறவந்த 100 ஆபிரிக்கர்களில் 25 பேர் படகில் மரணமாகியுள்ளனர். எஞ்சியோர் இறந்தவர்களின் சடலங்களைக் கடலில் வீசிவிட்டனர்.

நீண்ட நாள்களாக உணவு, குடிதண்ணீர் ஆகியவை இன்றி கடலில் பயணஞ்செய்ததாலேயே இவர்கள் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சிய 75 பேருடன் கடலில் தத்தளித்துக கொண்டிருந்த படகை வர்த்தகக் கப்பலொன்றில பயணித்தவர்கள் கண்டு, அனைவரையும் கரை சேர்த்துள்ளனர்.

சிசிலி கடற்கரையிலிருந்து 75 மைல்களுக்கு அப்பாலுள்ள ஜிப்ரால்ட்டர் என்னுமிடத்தில் இவர்கள் மீட்கப்பட்டுள்ளார்கள். அச்சமயம் இவர்களிடத்தில் குடிதண்ணீர் சிறிதளவும், உணவுப் பண்டங்கள் சிறிதளவுமே இருந்துள்ளன.

நாங்கள் சூடான், லைபீரியா, ஐவரிகோஸ்ட், சீராலியொன் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்கள். படகோட்டிகள் எம்மிடம் பயணக் கட்டமாக 800 டொலர்கள் முதல் 1,800 டொலர்கள் வரை அறவிட்டுள்ளனர். மொத்தமாக படகில் 100 பேர் கிளம்பினோம். கடந்த ஒன்பது நாள்களுக்கு முன்னர் லிபியாவை விட்டுக் கிளம்பினோம். 25 பேர் இறந்துவிட்டனர். உடல்களைக் கடலில் எறிந்துவிட்டே வந்தோம் என்று பொலீஸில் குறிப்பிட்டுள்ளார்கள். மீட்கப்பட்டவர்களில் நோயுற்றிருந்த ஒருவர் மால்ட்டா மருத்துவமனையில் காலமானார். பல்வேறு வியாதிகளால் பீடிக்கப்பட்ட இன்னும் பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலீஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.



நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம் என்ற ஆசையில் இவ்வாறு பலர் மத்திய தரைக்கடலைக் கடந்து இத்தாலி உட்படப் பல நாடுகளுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறுகின்றார்கள். வட அமெரிக்காவுக்கும், இத்தாலிக்கும் இடையில் இத்தகையோரை ஏற்றிச செல்வதில் சிறுசிறு படகுகளே ஈடுபட்டுள்ளன.

## ஈராக்கில் துணை ஆளுநரைக் கொல்ல முயற்சி

பக்தாத்,ஓக.11

ஈராக்கின் பலாத்ரஸ் நகரில் கார்க்குண்டு வெடித்ததில் 7 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

பக்தாத்திலிருந்து வடகிழக்குத் திசையில் 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது பலாத்ரஸ். இங்கு தியாலா மாகாண துணை ஆளுநர் அகில் ஹமீத் அல் அதிலியை கார்க்குண்டு மூலம் கொல்லக் கடந்த திங்கட்கிழமை காலையில் முயற்சி நடைபெற்றது.

இதில் இலேசான காயங்களுடன் அதிலி தப்பினார். ஆனால், 7 பொலீஸார் இறந்துவிட்டனர். இதை அமெரிக்க இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள மருத்துவமனையின் அதிகாரி கைசர் ஹமீத் கூறுகையில், இத்தாக்குதலில் 14 பேர் காயமடைந்தனர். துணை ஆளுநர் அதிலிக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இறந்த இருவரது உடல்கள் எங்கள் மருத்துவமனையில் உள்ளன. அவர்கள் பொலீஸாரா, பொதுமக்களா எனத் தெரியவில்லை - என்றார். (8)

உலக அரங்கில்

# ஜப்பானின் அணு மின்நிலையத்தில் நேற்றுமுன்தினம் பெரும் தீ விபத்து

## 4 பேர் பலி; 7 பேர் காயம்!




ஜப்பான் தலைநகர் ரோக்கியோவுக்கு 350 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புகி என்ற இடத்தில் அமைந்த மிகாமா அணு மின் நிலையத்தில் ஏற்பட்ட கசிவில் 4 பேர் இறந்தனர். உடனடியாக அணு மின்நிலையச் செயற்பாடு நிறுத்தப்பட்டது.

மிகாமா அணு மின்நிலையம் மிகப் பெரும் அணு மின் நிலையம். இதில் 8.26 லட்சம் கிலோவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. ஜப்பானின் கான்சாய் மின் நிறுவனத்தின் கீழ் செயற்படும் இதில் நேற்றுமுன்தினம் பெரும் விபத்து ஏற்பட்டது. இந்த அணு மின் நிலையத்தின் மூன்றாவது ரியாக்டர் பகுதியில் இருந்து தொழிலாளர்கள் தலைக்கவசம் அணிந்து அவசரப்பாதை வழியே வெளியேறுவதை ஜப்பானியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

விபத்து நடந்த பகுதியில் 221 பேர் பணிபுரிந்ததாகக் கூறப்படுகிறது. மிக முக்கியமான குழாய் ஒன்றில் இருந்து 287.06 டிகிரி வெப்பத்துடன் நீராவி வெளியேறிக் கசிவு ஏற்பட்டது. அதனையடுத்து 4 பேர் பலியானார்கள். 7 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், கசிவு ஏற்பட்ட நீராவியில் அணுக்கதிர் வீச்சு ஏதும் இல்லை. இந்த விபத்து நடநத இடத்தைச் சுற்றியும் அணுக்கதிர் கசிவு இல்லை - என்றார்.

பிரதமர் கொய்சுமி கூறும்போது, இம்மாதிரிச் சம்பவம் இனி நடக்கக் கூடாது. பாதுகாப்புக் குறைகள் சிறிதும் இருக்கக்கூடாது. எனக்கு விபத்துக் குறித்து முழுத் தகவலகள் வரவில்லை என்றார்.

இன்னும் சில நாள்கள் கழித்து முழுவிசாரணை முடிவில் தான் அணுக்கதிர் வீச்சு நடந்ததா அல்லது இல்லையா என்பது தெளிவாகும்.

தன் மூன்றில் ஒருபங்குத் தேவையை அணுமின்சாரம் மூலம் ஈடுகட்டிவரும் ஜப்பானில் கடந்த சில ஆண்டுகளாகவே அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கும், அதைத் தொடர்ந்து பராமரிப்பதற்கும் எதிர்ப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# பலஸ்தீன இயக்கங்கள் மத்தியில் ஒருமைப்பாடு மிக அவசியமாகும்

## எகிப்து வலியுறுத்துகிறது

இஸ்ரேலிய படைகள் பலஸ்தீன எல்லைகளிலிருந்து வெளியேறியதும், பலஸ்தீன் மத்தியில் ஒற்றுமை நிலவவேண்டும். தீவிரவாத இயககங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படக்கூடாதென எகிப்து அறிவித்துள்ளது.

இந்த ஒற்றுமையை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பலஸ்தீன தீவிரவாத இயக்கங்களில ஒன்றான ஹமாஸுடன் எகிப்து உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது.

இஸ்ரேல் வெளியேறியதும், காசாவுக்குப் பாதுகாப்புத் தருவதாகவும் எகிப்து ஏற்கனவே அறிவித்திருந்தது. கடந்த வாரம் கெய்ரோவில் எகிப்திய தலைவர்களுடன் ஹமாஸ் தலைவர்கள் இது தொடர்பாகப் பேச்சுகளும் நடத்தியுள்ளார்கள்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் காசாவிலிருந்து இஸ்ரேலியப் படைகளையும் குடியேற்றங்களையும் மீளப்பெறுவதற்கு முடிவுசெய்துள்ளார். அதேபோல் மேற்குக் கரையிலுள்ள 120 இஸ்ரேலியக் குடியேற்றத் திட்டங்களில் நான்கை வாபஸ் பெறுவதற்கும் அவர் தீர்மானித்துள்ளார்.

இதையடுத்து காசாவிலுள்ள பலஸ்தீன பொலஸ படைக்கு முறையான பயிற்சியளிப்பதற்கு 200 பாதுகாப்பு ஆலோசகர்களை அனுப்பி வைக்கவும் எகிப்து முன்வந்துள்ளது.

காசாவிலிருந்து இஸ்ரேல் வெளியேறியதும், காசாப் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதில் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களிடையே மோதல்கள் ஏற்படலாமென எகிப்து அச்சம் தெரிவிக்கிறது. (8)



பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம் இது.

## பிரிட்டனில் கைதான
# ஆசியக் கைதிகளை விசாரிக்க லண்டன் நீதிமன்றம் அவகாசம்

பிரிட்டனில் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஒன்பது கைதிகளை விசாரிக்கப் பொலீஸாருக்கு லண்டன் நீதிமன்றம் அவகாசம் வழங்கியுள்ளது. பிரிட்டனில் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு உதவுவதாகக் கடந்த வாரம லண்டனில் 13 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில இருவர் மீது எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லாததால் விடுவிக்கப்பட்டனர். போலி அடையாள ஆவணங்கள் மற்றும் போலி குடியிருப்பு ஆவணங்கள் காண்பித்த இருவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தீவிரவாதத்திற்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் கீழ் ஒன்பது பேர் லண்டன் பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டுள்ளனா. இவர்கள் அனைவரும் 19 முதல் 32 வயதுக்குட்பட்டவர்கள்.

அல்-கெய்டாவுடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளி முகமது நயீம் நூர் கான் கடந்த மாதம் பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டார். இவருக்கு வயது-25. கம்ப்யூட்டர் நிபுணரான இவருடன் தற்போது கைது செய்யப்பட்டவர்களுக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஆனால், இதைப் பாகிஸ்தானோ, பிரிட்டன் அரசோ உறுதி செய்யவில்லை. லண்டனில் ஹீத்ரோ விமான நிலையத்தின மீது தாக்குதல நடத்தத் சதித்திட்டம் போட்ட பிரிட்டன் அல்-கெய்டா தீவிரவாதி அபு ஈசா அல் ஹிந்தியுடன் இந்த ஒன்பது பேருக்கும் தொடர்பு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயங்கள முகமது நயீம் நூர் கானின் கணனியில் பதிவான தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அதனால், இவர்களிடம் மேலும் விசாரணை நடத்த லண்டன் பொலீஸார் கால அவகாசம் கேட்டிருந்தனர். விசாரணைக்கான கால அவகாசத்தை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சதாமை விசாரணை செய்யும் நீதிபதிக்குப் பிடியாணை

சதாம் ஹுசைனை விசாரிக்கும் நீதிபதி சலீம் சலாபிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது பெரியப்பாவும், ஆளும் கவுன்சில் முன்னாள் உறுப்பினருமான அகமது சலாபியையும் கைதுசெய்யப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொலைக்குற்றம் காரணமாக சலீம் சலாபியை கைதுசெய்வதற்கே பிடியாணை பிறப்பிககப்பட்டுள்ளது.

கள்ளநோட்டு அச்சடித்த குற்றச்சாட்டின் பேரில் அகமது சலாபிக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தனர். நிதித்துறை அமைச்சின பணிப்பாளர் நாயகமாக இருந்த ஹைதம்பட்ஹில் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் சந்தேகத்துக்குரியவராக சலீம் சலாபி கருதப்படுகிறார். (8)

## அரசைக் கலங்க வைக்கும் ஆபத்தான பூச்சிகள்

மேற்கு ஆபிரிக்காவில் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் உள்ள நாடு மவுரித்தானியா. பெரும்பாலும் விவசாயமே இந்த நாட்டின் முக்கிய தொழில். இந்த நிலையில் அந்த நாட்டில்



உள்ள விவசாயப் பயிர்களை ஒருவித வெட்டுக்கிளி போன்ற பூச்சி தாக்கி அழித்து வருகிறது. இந்தப் பூச்சிகள் ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்குத், தமது எடையை விட பலமடங்கு எடை உள்ள பயிரைத் தின்று தீர்க்கின்றன.

இந்த ஆபத்தான பூச்சிகள் இதுவரை 25 லட்சம் ஏக்கரில் பயிரை அழித்து நாசமாக்கிவட்டன. வேகமாகப் பரவி, தாக்குதல் நடத்தும் இந்தப் பூச்சியை அழிக்க வழி தெரியாமல் மவுரித்தானிய அரசு திணறுகிறது. தீவிரவாதிகளை விட மிக மோசமானது இந்தப் பூச்சி என்கிறார்கள் அதிகாரிகள். (8)

## தவறிவிட்டது

தா்மலிங்கம் மணிவண்ணன் என்பவருடைய தேசிய அ.அ. (இல. 680540152V). விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை, முக்கிய ஆவணங்கள் என்பன அடங்கிய மணிப்போ்ஸ் ஒன்று பண்ணை வீதி, கரும்பாத்தை அம்மன் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவா்கள் நாரந்தனை மத்தி - உபதாா்கந்தோாில் ஒப்படைத்துதவவும். (35124)


# வங்காலையில் 500 வெடிபொருள்கள் மீட்பு!

மன்னாா்,ஓக.11

மன்னா் வங்காலைப் பகுதியில் கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோரால் இதுவரையில் ஐநூறு வரையிலான வெடி பொருள்கள் மீட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று, தெரிவிக்கப்படுகிறது.

சா்வதேச ஹொரைகன் (Horaigan) நிறுவனமே இப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. வங்காலை, தோமஸ்புாி ஆகிய இடங்களில் மோப்பநாயின் உதவியுடன் மீட்புபணியில் இவா்கள் ஈடுபட்டு வருவதனைக் காண முடி கிறது. இதில் பணியாற்றும் அனைவரும் முன் னாள் இந்தியப் படையினா் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ)

# மன்னாா் ஆஸ்பத்திாியின் 'எக்ஸ் - கதிா்' இயந்திரம் பழுது

மன்னாா்,ஓக.11

மன்னாா் மாவட்டப் பொதுவைத்தியசாலையில் எக்ஸ் கதிா் இயந்திரம் பழுதடைந்துள்ளமையால் நோயாளா்கள் பெரும் அசௌகாியங்களுக்கு உள்ளாகிவருகின்றனா்.

கடந்த ஜூன் மாதம் இந்த இயந்திரம் பழுதடைந்தது. கொழும்பிலிருந்து மூன்று தடவைகள் உாிய தொழில்நுட்பவியலாளா்கள் திருத்த வேலைக்காக வருகைதந்தபோதும் பழுது இன்னமும் சீா் செய்யப்படவில்லை. இதனால் 'எக்ஸ் - கதிா்' பாிசோதனைக்குாிய நோயாளா்கள் வவுனியா மாவட்டப் பொதுவைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனா். இயந்திரம் திருத்தியமைக்கப்படும்வரை வேறு 'எக்ஸ் - கதிா்' இயந்திரம் ஒன்றினைப் பெற்றுத்தருமாறு மன்னாா், மாகாண சுகாதாரசேவைப் பிரதிப்பணிப்பாளா், வடகிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளாிடம் வேண்டுகோள் விடுத்துள்ளாா்.

(ஐ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 02 - 1926



மறைவு 25 - 07 - 2003

### திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா

(போக்கத்தை, கைதடி வடக்கு, கைதடி)

திதி: 11-08-2004

ஆண்டொன்றான தம்மா
ஆறவில்லை எம்மனது
என்றும் உம் நினைவுடனே
ஆண்டவனைப் பிராா்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

29, செட்டித்தெரு லேன்,
நல்லூா். (35125) (26-12) - பிள்ளைகள்.


# நலன்புாி நிலையங்களின் சமாசத் தலைமையகம் சுன்னாகத்தில் திறக்கப்பட்டது

வலி. வடக்கு,ஓக.11

இடம் பெயா்ந்தோா் நலன்புாி நிலையங்களின் சமாச தலைமைச் செயலகம் சுன்னாகத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயா்ந்தோா் நலன்புாி நிலைய சமாசத் தலைவா் சி.கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடாினை யாழ்.மாவட்டத் துணை அரசியற்றுறைப் பொறுப் பாளா் பு.செம்மணன் ஏற்றிவைத்தாா்.

தலைமைச் செயலகத்தின் பெயா்ப்பலகையை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவா் சி.சிவமகாராசா திறந்து வைத்தாா்.

அலுவலகக் கட்டடத்தை வலி.தெற்கு உடுவில் பிரதேசச செயலாளா் சு.திருவாகரன் திறந்து வைத்தாா்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினா்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன், எஸ்.கஜேந்திரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனா்.

(ஐ-86)


## CIMA

CIMA நிறுவனத்தில் இருந்து உயா் அதிகாாிகள் குழு மாணவா்களைச் சந்திப்பதற்காக வருகை தருகின்றனா். எமது நிறுவன மாணவா்கள், CIMA கற்க விரும்பும் மாணவா்கள் மற்றும் ஆா்வமுடையோா் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம் : 12.08.2004 காலை 10.00
(வியாழக்கிழமை)

Director
Jaffna College Undergraduate Dept.
464, ஆஸ்பத்திாி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/36546)(22-12-26)



## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [வ.து]

## பதவி வெற்றிடம்

01. பதவி: விற்பனை உதவியாளா்.
குறியீட்டு இலக்கம் 308/17
சம்பள அளவுத்திட்டம்: 3000 - 55X10, 60X10 - 4150
(கூ. வே. ஆ. சுற். நிருபம் 31/99இன் படி)
தகைமைகள்: அ) கூட்டுறவுப் பணியாளா் (கனிஷ்டம்) சித்தி
அல்லது
ஆ) 8ஆம் வகுப்பு சித்தியும், விற்பனைத்துறையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுவமும்.
வயது: 18 - 45

02. பதவி: சாரதி.
குறியீட்டு இலக்கம் 312/15
சம்பள அளவுத்திட்டம்: 3500 - 65X10, 70X10 - 4850
(கூட். வேலை ஆ. சுற். நிருபம் 31/99இன் படி)
தகைமைகள்: 5ஆம் வகுப்புச் சித்தியுடன் இலகுரக வாகனம செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரமும், இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.
வயது: 18 - 45

சங்கம் கோரும் பிணைப் பணம் செலுத்துதல்வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோா் சங்கத்தின் தலைமைக் காாியாலயத்தில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். வேறு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவா்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கப்பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவா்களுக்கு முன்னுாிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளா், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவாிக்கு 27.08.2004ஆம் திகதிக்கு முன்பாக நோிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து............. பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

புகையிரத நிலைய வீதி, மல்லாகம். பொதுமுகாமையாளா்.
(30-26-12) (35126)


# பெண்களுக்கான கைப்பணிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.11

பெண்கள் அபிவிருத்தி புனா்வாழ்வு நிறுவனத்தினால் தொழில் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பெண்களுக்கான கைப்பணி தொழில் பயிறசிக்கு எதிா்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை 'பெண்கள் அபிவிருத்தி புனா்வாழ்வு நிறுவனம், மாவட்ட செயலகம், போின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி' என்ற முகவாிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ)

# விசேட பஸ்சேவை

வடமராட்சி,ஓக.11

மடுமாதா கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ, பருத்தித்துறையிலிருந்து மடுமாதா கோயிலுக்கு விசேட பஸ்சேவை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை வியாழக்கிழமை முற்பகல் இவ் விசேட பஸ்சேவையிலீடுபடும் பஸ்கள் பருததித்துறையிலிருந்து மடுநோக்கிப் புறப்படும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மடுமாதா திருவிழா நிறைவுற்றதும் அங்கிருந்து பருத்தித்துறைக்கு மீண்டும் பஸ்கள் வந்து சேரும்.

இந்த விசேட சேவையில் இரண்டு பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளன.

(10-173)


## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல. ஜே/1591 - 06-03-72

எமது சங்கத்தில் கீழ்காணும் கட்டட வேலைக்கும் மின் இணைப்பு வேலைக்கும் கூலிகளுக்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகிறது.

01. மதில் (எல்லைச் சுவா்) 7 அடி உயரம், மொத்த நீளம் 253 அடி
02. உற்பத்தி நிலையம், கிளை நிலையம் மின் இணைப்புவேலைகள் செய்தல்

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுதிகதி: 27-08-2004.
விண்ணப்பம் பாிசீலனை செய்யப்படும் திகதி: 06-09-2004

மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பாா்வையிடலாம். சங்கத்தினால் வழங்கப்படும் கேள்வி கோரல் விண்ணப்பத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரா் வேலையின் 5% மீளளிப்பு செய்யும் முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.

தலைவா்,
தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம். (சி36544)(21-12-26)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வேலுப்பிள்ளை மாா்க்கண்டேயபிள்ளை

(ஓய்வுபெற்ற மின் பொறியியலாளா் தரம் II
இலங்கை மின்சார சபை)

தோற்றம் 19.02.1943 மறைவு 14.07.2004

எமது குடும்பத் தலைவா் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவா்கள், இறுதிக்கிாியை நிகழ்வில் கலந்துகொண்டவா்கள், தொலைபேசி மூலம் வருத்தம் தெரிவித்தவா்கள் பிரசுரங்கள் வெளியிட்டு அஞ்சலி செய்த நிறுவனத்தினா்கள், இரங்கலுரையாற்றிய நிறுவனத்தினா்கள், இறுதிக்கிாியைகளில் உதவிகள் செய்தவா்கள், எமது குடும்பத் தலைவாின் ஆத்மா சாந்திக்காகப் பிராா்த்தித்தவா்கள் அனைவருக்கும் எமது மனப்பூா்வமான நன்றிகள் உாித்தாகுக.

மேலும், 13.08.2004 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் கிாியைகளிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (சி-36545) (24-12-26) மா.இராஜேஸ்வாி (மனைவி).



## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

☆ பணிநிலை: கணனித்தரவு பதியுநா்
☆ தகைமை:
01 எம்.எஸ்.ஓபீஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.
02. க.பொ.த. உயா்தரத்தில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.
☆ சம்பள அளவுத்திட்டம்: $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

தகுதியுடையவா்கள் 2004-08-20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவாிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகைதரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

மனிதவள மேலாளா்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-36543) (26-19-15-24)

## தெல்லிப்பழை
## இந்து இளைஞர் சங்கம் ஏலம் கூறல்

துர்க்காதேவி தேவஸ்தான மகோற்சவ கால வாடகை கடை ஏலம் கூறல் நாளை (12.08.2004) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு சங்கக் காணியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தெல்லிப்பழை
(35136)(35-11-16) இந்து இளைஞர்சங்கம்.

இருபாலை கிழக்கு, கேணிக்குளம் பதி
அருள்மிகு லிங்கவிநாயகர் தேவஸ்தானம்
(பழம்பிள்ளையார்)

## மகோற்சவ விஞ்ஞாபனம் -௨௦௦௪

மெய்யடியார்களே!

மேற்படி மகோற்சவம் நாளை (12-08-2004) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் சிறப்பானமுறையில் உற்சவங்களும் அன்னதானமும் நடைபெற இறையருள் கூடியுள்ளது. அதனால் அடியவர்கள் இறைவனை வழிபாடு செய்து பேரருள் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தெய்வீகப் பேருரை
தினமும் இரவு 8.30-9.30 மணிவரை
நிகழ்த்துபவர்:
செஞ்சொற்செல்வர் *ஆறு.திருமுருகன்* அவர்கள்
*மகோற்சவ பிரதமகுரு:*
*சிவாகம கிரியாரத்தினம்*
*சிவஸ்ரீ சதா.மகேஸ்வரக்குருக்கள் J.P.*
(பிரதம குரு இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்மன் கோயில் நாயன்மார்கட்டு)
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

*தர்மகர்த்தாக்களும்.* *ச.வைத்தியநாதன் ஐயா,*
(35140)(32-11-16) *ஆலய பரிபாலகரும் அர்ச்சகரும்.*

## கண்ணீர்க் காணிக்கை

அமரர் முருகேசு சிறீஸ்கந்தராசா
(தலைவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடமராட்சிக்கல்வி வலயம், அதிபர், யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(C/36552)(43-11-16) - இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடமராட்சிக்கல்வி வலய ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
*திருமதி* மங்களவதனி உதயகுமார் அவர்களின்
அன்புத் தாயார் **அன்னம்மா குணரத்தினம்**
அவர்கள் மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
(35138)(43-11-16) யாழ்/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ந.செபமணி

மல்லாகம் மாதா கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ந.செபமணி நேற்று (10.08.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.நவம் அவர்களின் அன்பு மனைவியும் செபமாலை மற்றும் காலஞ்சென்ற அருட்பிரகாசம், யேசுதாசன் ஆகியோரின் சகோதரியும், டொறிஸ் (இத்தாலி), றிச்சேட் (இத்தாலி), மல்லிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராஜாசுலோகநாயகம் (இத்தாலி), அன்னமேரி (சுகந்தி, இத்தாலி), ஜெயக்குமார் ஆகியோரின் மாமியாரும், றிபெல்லா (இத்தாலி), டினுஷாந், ஸ்ரெவானி ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-08-2004) பி.ப.3.30 மணிக்கு நல்லடக்கத்திற்காக குளமன்கால் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதா கோவில் வீதி,* தகவல்:
*மல்லாகம்.* (35142)(32-11-16) மல்லிகா (மகள்)

### தம்பிப்பிள்ளை தம்பிஜயா

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தம்பிஜயா அவர்கள் நேற்று (10.08.2004) செவ்வாய்க்கிழமை புளியங்கூடலில் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீகலா (கனடா), ஸ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,* தகவல்:
*புளியங்கூடல் சந்தி,* ச.இராசதுரை
*வேலணை.* (C/35148)(43-11-16) (பெறாமகன்)

### முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா J.P.

(முன்னாள் அதிபர் யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)
துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா (J.P.) அவர்கள் 09.08.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2004) வியாழக்கிழமை காலை நடைபெறும். (மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்). இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமரைக்குளத்தடி,* தகவல்:
*துன்னாலை, கரவெட்டி.* (C/36560)(43) ஸ்ரீகரன் (மகன்)

## நாய்களுக்குத் தடுப்பூசி

வலி.வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி இன்றும் நாளை வியாழக்கிழமையும் ஏற்றப்படஉள்ளன.

இன்று தடுப்பூசி ஏற்றப்படும் நேரம், இட விவரங்கள் வருமாறு:-

காலை 9 மணி தொடக்கம் 11மணிவரை அளவெட்டி வடக்கு கலைவாணி ச.ச.நிலையம், மு.ப. 11.15 மணி தொடக்கம் பி.ப. 12.30 வரை அளவெட்டி வடக்கு அறிவொளி ச.ச. நிலையம் பி.ப. 1.00மணி தொடக்கம் பி.ப. 2.30 வரை அளவெட்டி வடக்கு பத்தானை பாரதி ச.ச. நி.

நாளை வியாழக்கிழமை தடுப்பூசி ஏற்றப்படும் விவரங்கள் வருமாறு:-

காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11மணி வரை அளவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் ச.ச.நி., அளவெட்டி மேற்கு முருகபுரம் ஸ்ரீரங்கன் ச.ச.நி. பத்துப்பனையடி அளவெட்டி, மேற்கு கலைமகள் ச.ச.நி.அளவெட்டி மேற்கு காட்டுப்புலம்.

(ஒ-201)





ஸ்ரார்
பெண்கள் அழகுக்கலை நிலையம்

அழகுக்கலை பயிற்சி வகுப்பு
புதிய பிரிவு ஆரம்பம் : 15-08-04
மணப்பெண் அலங்காரம்
✪ கேக் ஐசிங்
✪ தையல்
✪ சாறி அலங்காரம்
✪ பற்றிக் வர்ணம் தீட்டுதல்
✪ கிறிஸ்ரல் உபகரணம்
✪ பொக்கே வடிவமைத்தலும் மலர் அலங்காரமும்
✪ கைப் பணிகள்
தொடர்புகளுக்கு: *ஸ்ரார்*
பெண்கள் அழகுக்கலை நிலையம்,
இல: 910, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி (35139)(32)


### தவறிவிட்டது

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த கதிரவேலு ஜெயமிளா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும், கனகரத்தினம் நிலோசினி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் அடங்கிய கைப்பை ஒன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் தவற விடப்பட்டுவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: நியூ அருள்நாயகி புத்தகசாலை, பஸ் நிலையம், கொடிகாமம்.
☎ 0776 153745 ,0777 917749 (C/36551)


## வேலை ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும்
விமாகி நிறுவனத்தாருக்கு
கீழக்கண்ட வேலைகளுக்கு
ஆள்கள் தேவை.

1.ஸ்ரோர் கீப்பர்
2.சேல்ஸ்மன்

மேற்படி வேலைக்கு முன் அனுபவமுள்ள படித்த இளவயதினர் 11.08.2004 புதன் 10 மணிக்கு நேரில்வரவும்.
(சி-36542) - விமாகி.

## வீடு விற்பனைக்கு

மீசாலை மேற்கில் கண்டி வீதி, பழைய ஸ்ரேசன் அருகில் 4 1/2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய கல் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
பஞ்சாட்சரம் ஜெகசீலன்,
மீசாலை மேற்கு, மீசாலை.
தொலைபேசி: 0776146900
(35133)

ராஜா யாழ்ப்பாணம்



சிலதினங்கள் மட்டும்
சிம்பு. ரம்யாகிருஷ்ணன். மும்தாஜ் நடித்த
குத்து
புதியநேரம்: 10.30, 2.30, 6.30
(சி-36364)(32)

லக்சுமி இணுவில்
சேரன், சினேகா, கனிகா, கோபிகா,
இன்னும் பலர் நடிப்பில்
ஆட்டோகிராஃப்
தினசரி 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
(35060)(29)

நாகம்ஸ் சுன்னாகம்
(C/36415) (12)
சரத்குமார், சாக்ஸி,
வடிவேல நடித்த
மானஸ்தன்
காட்சிகள்: 11.00,3.00,7.00(பு.நே.)



நிரஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
நேதாஜி
தினசரி 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு.
Past Perfect (இரவு 8.45 பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### ஐயம்பிள்ளை தில்லையம்பலம்

(முன்னாள் யாழ். வர்த்தகர்)

புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், யாழ்பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கொழும்பு-12 இல் வசித்தவருமாகிய ஐயம்பிள்ளை தில்லையம்பலம் 06.08.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நாகலிங்கம்-நாகலட்சுமியின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அருமைக் கணவரும், சிறிதரன் (ஜேர்மனி), முரளிதரன் (நோர்வே), சிவதரன்(ஜேர்மனி), கிரிதரன் (சுவிஸ்), சுபாஜினி (ஜேர்மனி), சுபாஸ்தரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலாதேவி, ஜெயந்தினி, சிவநந்தினி, சலுஜா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி சின்னத்தங்கம், இளையதம்பி, சின்னையா மற்றும் செல்லம்மா, சிவக்கொழுந்து, நடராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராஜலிங்கம், கந்தையா மற்றும் பறுவதம், செல்லம், காலஞ்சென்றவரான முருகேசு மற்றும் ராமசாமி, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, பத்மநாதன், தில்லைநடேசன் பாக்கியலட்சுமி, வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் சிவஞானம், கலாநிதி, சரோஜினிதேவி, பேரின்பநாதன், மதுரநாயகம் ஆகியோரின் சகலனும். அனோசன், டனுசன், பிரவீன், அஸ்வின், சுவேத், மதுஸா, அபினா, ஜனனி, கிரிஸனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.08.2004) புதன்கிழமை பி.ப 4மணிக்கு பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

H.U.2.2 DIAS PLACE
GUNASINGAPURA
COLOMBO-12
T.P.5339384 , 0776 139443

தகவல்:-
தி.மங்கையர்க்கரசி
(மனைவி)
(35146)(35)

### வேலுப்பிள்ளை கதிரவேலு

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யாழ். போதனா வைத்தியசாலை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கதிரவேலு அவர்கள் 08-08-2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், துரைராஜா (கனடா), செல்லத்துரை (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தா, கிரிஷாந்தா (சுவிஸ்) வினோதினி (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), தபோதினி (கால்நடை வைத்தியர், திருகோணமலை) ஆகியோரின் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீகீர்த்தி (சுவிஸ்) சுஸ்ருதன் (ஸ்ரீ.ரெலி) ஆகியோரின் மாமனாரும் கோகிலமேனன், நிலானி, சேரன், வர்த்தினி, சுபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-08-2004 வியாழக்கிழமை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அச்சுவேலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துரைராஜா அவனியூ,* தகவல்:
*சந்நிதி கோயில் வீதி, அச்சுவேலி.* குடும்பத்தினர்.
(35144)(32-11-16)

### திருமதி பவளம் நடராசா

தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வத்தளையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் நடராசா அவர்கள் 08-08-2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா நடராசாவின் (ஓய்வுபெற்ற MLT,Tutor வைத்திய ஆராய்ச்சி நிலையம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை-செல்லாச்சியின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மாவின் அன்பு மருமகளும் சோதிலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமாதேவி, நிர்மலன் (Frame Work Metal) Product (PVt) Ltd), றஞ்சினி (Australia), குமுதினி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி), மஞ்சுளா (Netherland) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாபன் (Estee & Sons, Colombo-4), வதனி (ஆசிரியை, Alhilal Central College, Negombo), ஜெயரட்ணம், லோகநாதன் (Jaffna College Technical Institute, Vaddukoddai), ஜீவானந் ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராம், கோகுலராம், பாகவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழன் 12-08-2004 பி.ப.1.30 மணியளவில் நடைபெற்று கனத்தை மயானத்தில் தகனம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5/4, சீவலி ஒழுங்கை,*
*புகையிரத நிலைய வீதி,*
*வத்தளை.*
*தொலைபேசி: 011-2936198, 0112946315*

தகவல்:
லோகநாதன்(மருமகன்)
(34143)(32-11-16)

### திருமதி சேதுநாயகி வைரமுத்து

(வைரமுத்து ரீச்சர்)



மீசாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சேதுநாயகி வைரமுத்து (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர், யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்) நேற்று முன்தினம் (09.08.2004) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் சி.ச. வைரமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் அருட்செல்வன் (பிரதிப் பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை-கண்டி), சிவச்செல்வன் (பொறியியலாளர் - லண்டன்), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் டாக்டர் ஜாமினி (சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ஜமுனா (லண்டன்), கிரிதரன் (கட்டடக்கலைஞர்- கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆஷா, பிருந்தினி, டனியா ஹரினி, மிதுன், கிருத்தி, தமயந்தி, தீபிகா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.08.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

***மீசாலை மேற்கு,*** தகவல்:
***மீசாலை.*** சி.ச.வைரமுத்து (கணவர்),
*T.P:0602213358* (35147)(32-11-16) குடும்பத்தினர்.

### அமெரிக்க, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய

# நான்கு நாடுகளின் உயர்மட்ட அவதானிகள் குழு இங்கு மனித உரிமை மீறல்களைக் கண்டறிய வரவேண்டும்

## சமாதான ஆதரவுக் குழுமம் வற்புறுத்தல்

"கொழும்பில் உள்ள சமாதானச் செயலகத்துடனும், கிளிநொச்சியில் தற்போது புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கான மனித உரிமைகள் செயலகத்துடனும் இணைந்து செயலாற்றி இலங்கையின் மனித உரிமைகள் குறித்து கண்டறிவதற்கு -

உதவும் நாடுகளின் டோக்கியோக் கூட்டத்தின் நான்கு இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளையும், சமாதான முயற்சிகள் தொடர்பான மனித உரிமைகள் ஆலோசகர் இயன் மார்ட்டினையும் உள்ளடக்கிய உண்மை அறியும் உயர்மட்ட அணி ஒன்றை (Fact Finding Team) அனுப்புவதற்கான முறைப்பாடுகளைச் செய்வதோடு அத்திட்டத்துக்கு ஆதரவும் தாருங்கள்"

- இவ்வாறு சர்வதேச சமூகத்தைக் கோரியிருக்கிறது சமாதான ஆதரவுக்குழுமம்.

சுனில், அபேசேகர, சுனந்த தேசப்பிரிய, றோஹான எதிரிசிங்க, கேதீஸ் லோகநாதன், ஜெஹான் பெரேரா, பாக்கியசோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோ வில்லியம், ஜாவிட் யூஸுவ் ஆகியோர் சமாதான ஆதரவுக குழுமத்தின் சார்பில் ஒப்பமிட்டு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரியிருக்கின்றனர்.

கடந்த ஏப்ரலுக்கும், ஜூனுக்கும் இடையில் பல அணிகளையும் சேர்ந்த நாற்பதுக்கும் அதிகமானோர் பொது இடங்களில் வைத்துக் கொல்லப்பட்டதைப் பட்டியலிட்டுள்ள இந்த அறிக்கை, கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையும் சுட்டிக் காட்டியுள்ளது.

வன்முறை, அச்சுறுத்தல் ஆகியவையின்றி வாழவும் தமது அரசியல் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் இலங்கை மக்களுககு உள்ள உரிமை முற்றாக மீறப்பட்டுள்ளதாக அறிக்கை குறை கூறுகின்றது.

மனித உரிமைகளும், ஜனநாயக நடைமுறைகளும் மோசமான கீழ் நிலையை அடைந்துள்ளன. இதனால் யுத்தநிறுத்த ஏற்பாடுகளுக்கும், அமைதி முயற்சிகளுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் தாக்கம் நேரிடலாம். அத்தோடு, இச் சம்பவங்களே! யுத்த நிறுத்த மீறல்கள்தாம்.

இந்நிலை, சமாதான முயற்சிகளில் எதிர்மறையான நிலைமை ஏற்படுத்தும் என் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல் கிஸன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அரசு, புலிகள், முழு சர்தேச சமூகம் உட்பட அனைத்துத்தரப்பினருமே மனித உரிமைகள் மீறப்படும் இவ்விடயத்தில் ஆகக் கூடிய சிரத்தை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

சில விடயங்களில் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பது பற்றிய விவரங்களும், வெளிப்படையான முறையிலும் பதில் கூறும் பொறுப்புடனும் அதிகாரிகளால் கையாளப்படவில்லை என்பதையும் கவலையோடு சுட்டிக்காட்டுகின்றோம்.

தற்போதைய அமைதி நடவடிக்கைகளின் சில சந்தர்ப்பங்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசியம் பேணல் தவிர்க்கமுடியாதது என்றாலும் - அமைதி நடவடிக்கைகளுக்கே அழிவை ஏற்படுத்தும் விதத்திலான யுத்த நிறுத்த மீறல்களுக்கு வழி செய்யும்வகையில், இராணுவத்துக்கும், ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் கூட்டுச் செயற்பாடு இருப்பதாகக் கூறப்படுவது குறித்து அரசு கவனிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

வீடுகள், பஸ்தரிப்பு நிலையங்கள், சந்தைகள், சிறைக்கூடம் எனப் பொது இடங்களிலேயே இக்கொலைகள் பலவும் இடம் பெற்றுள்ளன.

எனவே -

1. அரசும், புலிகளும் தத்தமது பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்துவதில் உள்ள தடைகள் குறித்து தத்தமது சட்ட ஒழுங்கு நிறைவேற்று அமைப்புகளுடன் கலந்தாலோசனை நடத்தவேண்டும்.

2. 1949ஆம் ஆண்டின் ஜெனீவா ஒப்பந்தத்தின் பிரகாரம் -ஆள்களின் உயிருக்கு அச்சுறுதல் விடாமல் இருப்பதை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரும் பகிரங்க உறுதி மொழிமூலம் உறுதிப்படுத்தவேண்டும்.

3. டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் நான்கும் சர்வதேச மனித உரிமை ஆர்வலர் இயன் மாட்டினையும் இணைத்துக்கொண்டு தத்தமது நாட்டுப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி உண்மையைக் கண்டறியும் உயர் மட்டக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பவேண்டும்.

மேற்படி கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு தன்னால் இயலாது என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு குறிப்பிட்டிருப்பதால மேற்படி கோரிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

4. கொழும்பு மற்றும் கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகங்களின் இணக்கத்துடன் -உள்ளூர் மற்றும் சமூகமட்டத்தில் சர்வதேச மற்றும் உள்ளூர் கண்காணிப்பாளர்களின் பங்களிப்புடன் - மனிதஉரிமைகள் கண்காணிப்பு நடைமுறைத் திட்டம் ஒன்றை வடிவமைப்பது குறித்து முயற்சிக்குமாறு வடக்கு - கிழக்கில் செயற்படும் சர்வதேச, தேசிய முகவர் அமைப்புக்களைச் கோருகின்றோம்.

-இப்படி சமாதான ஆதரவுக் குழுவும் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## களுவாஞ்சிக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இதில் இவர் தலை, வயிற்றுப் பகுதி ஆகியவற்றில் காயமடைந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் விசாரனை மேற்கொண்டுள்ளனர். (ஒ-3)

## அந்திராக்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

'அந்திராக்ஸ்' நச்சுப் பவுடர் தூதரகத்துக்கு வந்துள்ளது என்ற சந்தேகம் எழுந்ததும் தூதரக குளிரூட்டி ஒழுங்குகளையும், மின்விசிறிகளையும் பாதுகாவலர் செயற்படாமல் நிறுத்தினர்.

இவ்விவகாரம் தொடர்பாகத் தங்களின் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் தகவல்களை தாங்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-க)

## புலிகள்-படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் த.குயிலின்பன் தலைமையில் புலிகள் பிரதிநிதிகளும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரத்னநாயக்கா தலைமையில் விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் இச்சந்திப் பில் பங்குபற்றுவர்.

அம்பாறையில் தேடுதல் சோதனை என்ற பெயரில் புலிகளின் உறுப்பினர்கள் இம்சைப் படுத்தப்பட்டு, அகௌரவப்படுத்தப்படுகின்றனர் என்ற செய்திகள் வெளியாகிவரும் பதற்றமான நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலையில் கோஷ்டிமோதல்

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே நேற்று கோஷ்டி மோதல் இடம்பெற்றது.

கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் சிலரும் இறுதியாண்டு மாணவர்களுமே நேற்று முற்பகல் பல்கலைக்கழக வளாகத்தினுள் மோதிக்கொண்டனர்.

பல்கலைக்கழக ஒழுக்காற்றுப் பிரிவு தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ஒ-7-13)


பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344783
4665, OFTRINGEN, SWISS. (33927)

IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2004
மாணவர்களுக்கான அறிவித்தல்
எமது புலமைப்பரிசில் திட்டத்தின்,
விண்ணப்ப முடிவுத்திகதி : 12.08.2004
தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி : 15.08.2004
தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி : 22.08.2004
புலமைப்பரிசில் கற்கைநெறிகள் ஆரம்பமாகும் காலப்பகுதி (பிரிவு I) : 05.09.2004
அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
IBMS #410, K.K.S. Road, Jaffna.
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்! "அனைவருக்கும் கணனிக்கல்வி"

நாவலர்
ஆனைப்பந்தி - யாழ். நகர்
A/L DAY CLASS
Tam. - நாக தமிழிந்திரன்
H.C. - முகுந்தன்
Log. - S.R.J. சுதன்
Geo. - இக்னேசியஸ்
Acc. - மோதிலால்
Eco. - நவதாசன்
B.St. - முரளி
ஆரம்பம்: 13.08.2004
வெள்ளி 10.00 a.m. (35107)

CHEMISTRY GROUP CLASSES
DIAS B.Sc. (Hons) Spl. Chem.
★Theory Class ★Paper Class
★புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. (35100)
104/4, குறுக்கு வீதி, அத்தியடி.

இன்று ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி -யாழ.
A/L DAY CLASS
கலை, வர்த்தக வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம்: 11.08.2004
காலை 8மணி (Wed)
ACC.திரு.பாலவாசன் ECO.திரு.உதயன்
B.St.திரு.யசோ LOG.திரு.சயந்தன்
TAM.திரு.குழந்தை H/C.திரு.பத்மராஜ்
GEO.திரு.பாபு HIN.திரு.தரன்
HIST.திரு.சுதன் P.Sci.திரு.றொபின்சன்
CHRI.திரு.வசந்தன் Drama திரு.மதி.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

NEW SCIENCE CENTRE
யாழ். நகர்
A/L DAY CLASS புதிய பிரிவு
Phy. [ ஜெயசீலன் பிரபா
Che. - அன்பழகன்
Bio. - நாகநாதன்
Maths. - ஜெயந்தன் (c36532)

D.C.A
யாழ். பல்கலைக்கழக வெளிவாரி
B.A. FINAL விரிவுரைகள்
ஆரம்பம்: 14.08.2004
சனிக்கிழமை காலை 8.00மணி
★தமிழ்-மீரா
★இந்துநாகரிகம்-ஜோதீஸ்வரன்
★புவியியல்-கிரிதரன்
★மெய்யியல்-மோகன்
★அரசறிவியல்-பொன் சந்துரு
★நாடகம் - சந்திரன
★கல்வியாண்டு 2005 இற்கான 1st in Com., 1st in Arts வகுப்புகளும் நடைபெறுகின்றன. விவரங்களுக்கு
இயக்குநர் D.C.A (DMI)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (35094)

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கவில்லையா?
உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?
உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?
மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?
விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.
ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கும் வழிகாட்டக் காத்திருக்கின்றது.
உங்கள் பிள்ளை கணனித்துறையில் ஒரு துறைசார் வல்லுநராக சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவமான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம் வழிகாட்டுகின்றோம்.
கவலையை விடுங்கள் மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள் மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.
'IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி'
INSTITUTE OF INFORMATICS STUDIES
'An Edexcel approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. No: 021 222 2831/ 021 222 6933

CHEMISTRY CENTRE
Temple Road (Green Park முன்னால)
A/L 2005
BIOLOGY
mon., tue., fri ⇨ 5.00 ⇨ 6.00
By: அல்போன்ஸ்
CHEMISTRY
mon., tue., fri ⇨ 4.00 ⇨ 5.00
By: அன்பழகன் (36533)

கண்ணீர் அஞ்சலி
உரும்பிராய் லயன்ஸ் கழக உறுப்பினரும் மாவட்டம் 306-B இன் இணைப்பாளர்களில் ஒருவருமான லயன் ச.ஏகாம்பரநாதன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கண்மணி சண்முகம்
கொழும்பில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு உரும்பிராய் லயன்ஸ் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.
- உரும்பிராய் லயன்ஸ்கழகம் (சி-36562)(32-16-11)

ஈரல் கோளாறுகளா..............??
ஈரல் சிதைவு, மஞ்சள் காமாலை, திசுக்களில் இருந்து சீழ் வடிதல் ஆகியவற்றிற்கு திறமையான சிகிச்சை பெற எம்மைக்கலந்து ஆலோசியுங்கள்.
விவரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்:
FAIR PHARMA (PVT) LTD
(ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பாளர்கள்)
BOI அங்கீகாரம்பெற்ற கம்பனி.
லெவல்5/ஈஸ்ற் ரவர்/1C, உலக வர்த்தக நிலையம், கொழும்பு-01
PHONE:0094-11-5517897, 5551879, 5558442
FAX: 0094-11-5517756
E-mail: fppvtl @lankabellnet .Com
Website: www. fppvtl.Com (C/36515)(35)

SUBRA (14)
சித்தன்கேணி
A/L Day Class
இன்று ஆரம்பம்
11-08-2004
புதன் 7.00 (சி-36484)

ஓகஸ்ட் 21 முதல் நிலவு.com இன்
யாழ் Online.com
www.yarlonline.com
தொடர்புகளுக்கு : 0777917599


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பறைவேட) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2004இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.